Free Circulation Germany- England

மணி: 72 - ஓசை: 306 பங்குனி. March. 2022

# வெற்றிமணி

Vettimaniy

ESTD 1950

28TH years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

Orientalisch
Textilien & Schmuck
32 ஆவது ஆண்டு நிறைவு
என்றும் எம்முடன் தொடர்பில் இருங்கள்

Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

## ஒவ்வொரு சவாலுக்கும் ஒரு தீர்வு காணும் போது வளர்ச்சி தானாகவே வந்துவிடுகிறது!

முதன் முறையாக இலங்கையில், தாய், சேய் இணைந்து பரத நாட்டிய அரங்கேற்றம் கண்டனர்!



அபிநயக்ஷேத்திரா நடனப்பள்ளி மாணவிகள்





**மகளிர் தின சிறப்பிதழ்**

கௌரவ ஆசிரியர் ஜெயபவானி சிவகுமாரன்

**அனைவருக்கும் எங்கள் இனிய மகளிர் தின வாழ்த்துகள்**

**பெண்**

**நேற்று! இன்று!! நாளை!**



**சாதனைப் பெண்**

சுபா உமாதேவன் அவர்களுடன் (சுவிட்சர்லாந்து)

**ஓர் நேர்காணல்**






# அவள் ஆட்டம் போடுகிறாள்

படங்கள்:
தீவ்யகுமாரி சின்னையா
(அதிபர், லாஷ்யா காலா பவனம்)



● மாதவி

**பல** ஆண்களுடன் பேசினால் பயணங்களில் ஆண்துணையுடன் சென்றால் மட்டுமல்ல!

ஒரு பெண் எதற்கும் அஞ்சாமல் எவர்க்கும் அடங்காமல் தனக்கு சரி எனப்பட்டதை செய்தாலோ சொன்னாலோ போதும்! இந்தச் சமூகம் அவள் ஆட்டம் போடுகிறாள் என்றுதான் சொல்லும்.

ஒரு பெண்ணின் வாழ்வை இன்னொருவர் வாழத்தலைப்படுவது இந்த சமூகத்தில் இன்றும் அதிகமாகவே காணப்படு கிறது.

ஒரு அன்னை மகள் வேலைக்கு போகும் போது கண் கண்ட ஆண்களுடன் கதைக்காதே அந்த வேலையை விடு உனக்கு உதுசரிப்பட்டு வராது இப்படி பல பயத்தின் நிமிர்த்தம் மகளின் வாழ்வை தான் வாழத் தலைப்படுகிறாள். தந்தை அவள் என்ன உடை உடுக்கவேண்டும் என்று அவள் உடுப்பை அவர் தெரிவு செய்கிறார். தந்தை மற்றவர்கள் என்ன சொல்வார்கள் என்ற எண்ணமே! அவரை மகளின் வாழ்வை தான் வாழத் தலைப்பட வைக்கிறது.

திருமணமானால் கணவன் நான் அவளுக்கு எல்லாச்சுதந்திரமும் கொடுத்து இருக்கிறேன் என்று கொடுக்கும் அந்தஸ்த்து இன்னும் தனக்கே உண்டு என மறைமுகமாக சொல்கிறார். மாமியாரோ அதுதான் அவள் இந்த ஆட்டம் போடுகிறாள் என்று தீர்ப்பும் சொல்லிவிடுகிறாள்.

இத்தனையும் மீறி தனது வாழ்வை தான் வாழ முற்படும் போது அவள் ஆட்டம் போடுகிறாள் என்றாகிவிடுகிறாள்.

ஒரு பெண் தாயாகொ தாரமாகொ மகளாகொ சகோதரியாகொ இருந்து தனது பணியை தன் வேலைக்கு மத்தியிலும் இன்றும் அழகாகச்செய்யும் பெண்கள்கூடொ தனக்கு மனநிறை வைத்தரும் பிறருக்கு மகிழ்வைத்தரும் கலையோ பொதுச் சேவையோ செய்தாலும் வீட்டு வேலையும் சமையலும் செய்தே தனது விருப்புகளை வாழ் நாளில் செய்கின்றாள். வேலைக்கு சென்று கணனியில் உலகையே நெறிப்படுத்திவிட்டு வீட்டில் காய்கறி நறுக்குகிறாள் சிலர் நடனத்தில் ஆர்வம் என்று தான் தானாக வாழ முற்பட்டாலும் எழுதாத சட்டங்களாக இருக்கும் பெண்ணுக்குகான வேலைகளை முடித்து அல்லது அதற்கு அவளே மாற்று வழிகண்டே நடக்க வேண்டி உள்ளது.

அவன் ஆட்டம் போடுகிறான் என்ற சொல்லில்அவள் ஆட்டம் போடுகிறாள் என்ற சொல்லில் உள்ள வன்மம் இருப்பதில்லை.


காதல் என்ற பெயருக்குள் காமமும் மனைவி என்ற பெயருக்குள் சமையலும் மகள் என்ற பெயருக்குள் பொறுப்புகளும் நேற்றும் இன்றும் மட்டுமல்ல நாளையும் இருந்து கும்மியடிக்கவே செய்யும். ■



வெற்றிமணி

தமிழ் எங்கள்
உயிருக்கு மேல்

ஓசை : 306


ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

கௌரவ ஆசிரியர்
திருமதி ஜெயபவானி சிவகுமாரன்

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com


"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


Vettimaniy Ltd
Company No: 8876276


# திருமதி ஜெயபவானி சிவகுமாரன்

## மகளிர் தினத்தை முன்னிட்டு வெற்றிமணியின் கௌரவ ஆசிரியராக கௌரவம் பெற்றார்!



கௌரவ ஆசிரியர்
திருமதி ஜெயபவானி சிவகுமாரன்
(முன்னாள் ஆசிரியை
வவுனியா இரம்பைக்குளம்
அரசினர் மகளிர் மகாவித்தியாலம்)

ஆண்டு தோறும்பங்குனி மாதம் வெற்றி மணி ஒரு சிறப்பான பணிபுரிந்த பெண்ணை பங்குனி மாத இதழுக்கு கௌரவ ஆசிரியராக நியமித்து கௌரவிப்பது வழக்கம். இந்த வகையில் 28 வருடங்கள் வெற்றிமணியின் வெற்றிகளுக்கும் அதன் வளர்ச்சிக்கும் பின்னின்று உழைத்த எனது மனைவி முன்னாள் ஆசிரியை திருமதி ஜெயபவானி சிவகுமாரன் அவர்களை பங்குனி இதழின் கௌரவ ஆசிரியராக நியமித்து அவரது சிறப்பான பணியை வெற்றி மணி பதிவுசெய்கிறது. 28வருடங்கள். பத்திரிகை வளர்ச்சிக்கு முதுகெலும்பாக இருப்பவர் அறிவாகவும் எதிர் மறை கருத்துகளை விதைக்காமலும் எவரையும் புண்படுத்தாத மென்மையான போக்கை பத்திரிகையில் கட்டி வளர்த்தவர் பொருளாதார ரீதியில் பெரும் பங்கும் அளித்தவர்அதிகாலை 4 மணிக்கு எழுந்து வெற்றிமணிக்கு வேண்டியவற்றைக் கணனியில் செய்து தந்துவிட்டே வேலைக்கும் சென்றவர்.

இவர் இலங்கையில் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தகமை பெற்றவர். புலம்பெயர்ந்து யேர்மனி வரும்வரை பல வருடங்கள் ஆசிரியப்பணி புரிந்தவர். இறுதியாக [1985]வவுனியா இரம்பைக்குளம் அரசினர் மகளிர் கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிந்தவர்.

05 ஆம் பக்கம் பார்க்க...

# மீண்டும் அச்சுறுத்தும் வெள்ளை வான்கள்





கொழும்பிலிருந்து
ஆர்.பாரதி

ஒரு தசாப்தத்துக்கு முன்னர் இலங்கையை அச்சுறுத்திய வெள்ளை வான்கள் இலங்கையில் மீண்டும் ஓடத் தொடங்கிவிட்டனவா என்ற கேள்வியை எழுப்பும் வகையிலான சம்பவங்கள் அடுத்தடுத்து நிகழ்ந்துள்ளன. அரசியல் எதிராளிகளை ஒடுக்குவதற்கும் ஊடகத் துறையினரை அச்சுறுத்தி வாயை மூடச் செய்வதற்கும் இலங்கையில் வெள்ளை வான்கள் பயன்படுத்தப்பட்டமை சரித்திரத்தில் பதியப்பட்ட ஒன்று.

இவ்வாறு இரண்டு சம்பவங்கள் பெப்ரவரி மாதத்தில் இலங்கையில் இடம் பெற்றிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதலாவது ஊடகத்துறையை இலக்கு வைத்த ஒரு சம்பவம் பெப்ரவரி நடுப்பகுதியில் இடம்பெற்றது.

வெள்ளை வானில் வந்த 'இனந்தெரியாத' ஒரு குழுவினர் கொழும்பின் புறநகர் பகுதி ஒன்றில் ஊடகவியலாளர் ஒருவருடைய வீட்டை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியிருக்கின்றார்கள்.

தாக்குதலுக்குள்ளானவர் ஒரு பிரபலமான சிங்கள ஊடகவியலாளர். சமுத்ர சமரவிக்கிரம என்ற குறிப்பிட்ட ஊடகவியலாளர் இலங்கையின் பிரபலமான ஹிரு தொலைக்காட்சியில் பணிபுரிந்தாலும், அவர் மீதான தாக்குதலுக்கு அவர் செய்யும் யூ ரியூப் சனல்தான் காரணம் எனச் சொல்லப்படுகின்றது.

அரசாங்கத்தை விமர்சிக்கும் வகையிலான பல கருத்துக்கள் அரசை அம்பலப் படுத்தும் தகவல்கள் அதில் வெளிவந்திருக்கின்றது. ஆளும் தரப்பினருடைய ஊழல்கள் பலவும் அதில் அம்பலப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதனைவிட உட்கட்சி மோதல்களின் பின்னணிகள் பற்றியும் அவர் தனது நிகழ்ச்சிகளினூடாக வெளிக்கொண்டுவந்திருக்கின்றார்.

04 ஆம் பக்கம் பார்க்க...




03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# மீண்டும் அச்சுறுத்தும் வெள்ளை வான்கள்



இந்தப் பின்னணியில்தான் அவரது வீட்டின் மீது நள்ளிரவைத் தாண்டி அதிகாலை நேரம் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. எச்சரிக்கும் வகையிலான இந்தத் தாக்குதலுக்கு அவரைது யூ ரியூப் சனலில் வெளிவரும் தகவல்கள்தான் காரணம் என கொழும்பில் ஊடகத்துறை வட்டாரங்கள் கருதுகின்றன.

பெப்ரவரி 14 திங்கட்கிழமை அதிகாலை 2.00 மணியளவில்தான் இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருக்கின்றது. ஊடகவியலாளர் வசிக்கும் பிலியந்தலையிலுள்ள வீடமைப்புத் தொகுதிக்குள் வெள்ளைநிற வானில் வந்த காடையர் குழு ஒன்று பாதுகாப்பு அதிகாரியை நோக்கி துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்திவிட்டு ஊடகவியலாளரின் வீட்டுக்குள் நுழைந்துள்ளனர்.

பின்னர் வீட்டின் மீது கற்கள், மலக்கழிவு போன்றவற்றை வீசி விட்டும் சரமாரி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டும் அந்தக் குழு தப்பிச் சென்றுள்ளது. ஊடகவியலாளருக்கு விடுக்கப்பட்ட ஒரு எச்சரிக்கை இது என்பதில் சந்தேகமில்லை.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பிலியந்தலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இந்த விசாரணைக்காக ஒன்பது பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. 90க்கும் அதிகமான அதிகாரிகள் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளார்கள். 80 க்கும் அதிகமானவர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. இது குறித்த விசாரணைகளில் முக்கிய தடயமாக இருப்பது சி.சி.ரி.வி. கமராவில் சிக்கியிருக்கும் காணொளிகள்தான். ஊடகவியலாளரின் குடியிருப்பு அமைந்திருக்கும் பகுதிகளில் உள்ள சி.சி.ரி.வி. கமராக்களின் பதிவுகள் தொடர்ச்சியாக ஆய்வுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனைவிட, தாக்குதலுக்குப் பயன்படுத்திய பொருட்களில் கைரேகை அடையாளங்கள் இருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது. அவையும் தற்போது பரிசீலனைக் குள்ளாக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால், இதுவரையில் விசாரணைகளில் முன்னேற்றமில்லை. தாக்குதல்தாரிகள் யார் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை.

இலக்குவைக்கப்பட்ட ஊடகவியலாளர் எரிவாயு கலவை பிரச்சினை வெள்ளைப்பூண்டு மோசடி உள்ளிட்ட நாட்டில் இடம்பெற்ற பல்வேறு ஊழல் மோசடிகள் தொடர்பான தகவல்களை சமுதித தனது நிகழ்ச்சிகளில் அம்பலப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், அவர் இலக்குவைக்கப்பட்டமைக்கு அது மட்டும் காரணமல்ல என ஊடகத்துறை வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

12 ஆம் திகதி சனிக்கிழமை இரவு ஒளிபரப்பான பேட்டி நிகழ்ச்சி ஒன்றுதான் உடனடியாக அவர் இலக்குவைக்கப்பட காரணமாக இருந்திருக்க வேண்டும் என ஊடகத்துறை வட்டாரங்கள் சொல்கின்றன.



கடந்த பொதுத் தேர்தலில் ‘அபி ஜனபல பக்நுய’ என்ற பிக்குகளின் கட்சி போட்டியிட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அந்தக் கட்சிக்கு தேசியப்பட்டியலில் ஒரு ஆசனம் கிடைத்திருந்தது. அதற்கு யாரை நியமிப்பது என்பதில் உருவான சர்ச்சை இரண்டு பிக்குகளுக்கு இடையிலான மோதலாகி ஒரு பிக்கு கடத்தப்படும் அளவுக்கு இந்த அதிகாரப் போட்டி சென்றது.

அந்தக் கட்சியின் பொதுச் செயலாளராக சமன் பெரேரா என்பவர் அண்மையில் நியமிக்கப்பட்டார். பிக்கு அல்லாத ஒருவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டமை முக்கியமானது.

அந்த சமன் பெரேராவைத்தான் கடந்த சனிக்கிழமை தனது யூ ரியூப் சனலில் பேட்டிகண்டிருந்தார் சமுத்ர. பிக்குமாரிடையே உருவான மோதல் அதன் பின்புலம்இ அதன்போது இடம்பெற்ற பேரங்கள் என பல விடயங்களை சமுத்ர கிளறி கிளறி எடுத்துள்ளார். அதன்போது சமன்பெரேரா பல இரகசியங்களை கக்கிவிட்டதாகச் சொல்லப்படுகின்றது.

சனிக்கிழமை இரவு இந்த நேர்காணல் வெளிவர ஞாயிறு நள்ளிரவைத் தாண்டிய பின்னர் திங்கள் அதிகாலையில் சமுத்ரவின் இல்லம் இலக்கு வைக்கப்பட்டது.

27 ஆம் பக்கம் பார்க்க...




# ஜெயபவானி சிவகுமாரன் அவர்களின் சேவைக்கு

## வெற்றிமணி வழங்கும் கௌரவம்

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...



06.01.2020 ஆண்டு வெற்றிமணி சிவத்தமிழ் பிரதம ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் சிவத்தமிழ் விருது பெற்ற வேளை (சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அறக்கொடைவிழா, தெல்லிப்பழை)

ஆசிரியை திருமதி ஜெயபவானி சிவகுமாரன் அன்பாக மாணவர்களிடம் பழகுவதையும் எளிமையான சேலை உடுத்தி பாடசாலைக்கு வருவதையும் இன்றும் மாணவர்கள் எடுத்து கூறுவார்கள். இந்த எளிமைக் கோலம் யேர்மனி யிலும் வெற்றிமணி விழாக்களில் காண முடிந்தது.



வெற்றிமணி ஆசிரியத் தம்பதிகளை கலைவிளக்கு சு.பாக்கியநாதன் தம்பதியினர் கௌரவித்த வேளை.2002. (யேர்மனி)

ஒலிவாங்கிக்கு முன்னால் எக்காலமும் நிற்காதவர் யேர்மனியில் 38க்கு மேற்பட்ட விழாக்கள் சிறக்க பின் நின்றவர். வீடே விழாக்கோலம் பூண்டு இருக்கும்படியும் பார்த்துக்கொண்டவர். விழாக்கால விருந்தினர்களை வீட்டில் அன்போடு உபசரித்து மலர் முகத்தோடு வரவேற்பவர்.

மனைவியை பத்திரிகை எழுத்து பிழை பார்க்கச் சொன்னால் கருத்துப்பிழை மேலே அதிக கவனம் செலுத்துவார். யாரும் கட்டுரை கவிதைகள் மூலமும் தனிப்பட்டவர்களை தாக்கும் பகுதி வந்தால் அதனை உன்னிப்பாக கவனித்து அகற்றுவார்.



வெற்றிமணி வெள்ளிவிழா நிகழ்வில் வெற்றிமணித் தம்பதிகள் கௌரவிக்கப்பட்ட வேளை 2019. (யேர்மனி)

அதிகம் பேசாதவர் அதனால் நட்புவட்டம் மிகக்குறைவே. குறிப்பாக தொலைபேசியில் நீண்ட நேரம் பேசியதை நான் பார்த்ததே இல்லை. [தனிமையில் இருக்கும் வயதானவர்களிடம் உறவினர்கள் உட்பட பலரிடமும் சற்று நீண்ட நேரம் உரையாடி அவர்கள் தனிமையை போக்குவார்] எவரிடமும் பணம் சேர்த்து பிறருக்கு உதவுவதை அவர் விரும்புவது இல்லை. முடிந்தவரை எமது வருமானத்தில் தாயகத்தில் மாணவர் கல்விக்கு உதவினார். அந்த மாணவர்கள் படமோ செய்தியோ வெற்றிமணி யிலும் Facebook இலும் வராமல் பார்த்து கொண்டார். பல்கலைக்கழகம் வரை மாணவர்கள் கல்விகற்றனர்.

தனது பிள்ளைகள் கற்று முடிந்து திருமணமானதும் நல் ஊதியத்துடன் சிறந்த



வெற்றிமணி (இலங்கையில் ஆரம்பிக்கபட்டு 1950- 2000) பொன்விழாவில் அன்னையுடன் நாமும் சீர்காழி சிவசிதம்பரம் அவர்களும் 2000. (யேர்மனி)



ஆசிரியப் பணியாற்ற ஆரம்பித்தவேளை



வெற்றிமணி ஸ்தாபகர் அதிபர்; மு.க.சுப்பிரமணியம் அவர்களின் நூற்றாண்டு விழா .14.05.2019 (யேர்மனி)

வேலையை தானே முன்வந்து இராஜினாமா செய்தார். இப்படி வருமானம் உள்ள ஒரு வேலையை இப்படி துணிவாக விட்டுவிடும் ஆண்களும் பெண்களும் அரிதே. 1989 முதல் 2010 வரை kostal நிறுவனத்தில் வேலை செய்தார். 21 வருடத்தில் சும்மா சிக்லீவு எடுத்ததில்லை. மொத்தம் 21 வருடத்தில் 40 நாட்களுக்கும் குறைவாகவே சிக்லீவு எடுத்துள்ளார் என நிர்வாகமே பாராட்டியது.

இவரை எனது மனைவி என்பதாலோ அல்லது இது தற்புகழ்ச்சி என்றோ தவிர்த்து விட முடியாது.

எனது வெற்றிக்கு பின்னால் யார் யார் என்பதில் என் மனைவியும் ஒருவர் என்பதை வெற்றிமணி வரலாற்றில் பதிவிடொ பங்குனி மாதம் ஆசிரியை திருமதி ஜெயபவானி சிவகுமாரன் அவர்களை வெற்றிமணியின் கௌரவ ஆசிரியராக நியமித்து மகிழ்கிறது.

15 ஆம் பக்கம் பார்க்க...





Luckyfly
Lucky Fly Reisebüro
Ab:680€
2022 Summer
Booking start
SriLankan
New Summer
2022 Holidays
Book early & save BIG
உங்கள்
பதிவுகளுக்கு
முந்துங்கள்
e.mail: info@L-Fly.de | www.L-fly.de
SriLankan Airlines
QATAR AIRWAYS القطرية
Emirates
طيران الخليج Gulf Air
Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
Essener Str.26 44793 Bochum-Germany




# 'சூப்பர் மாம்' எனும் கைவிலங்கு

## நல்ல தாய்!

ஒரு பெண் தான் ஒரு நல்ல தாய் என்பதை தனக்கும் தன் குடும்பத்திற்கும் இந்த சமூகத்திற்கும் உணர்த்துவதற்காக கொடுக்கும் விலை மிக அதிகமானது. அதற்காக தன் வாழ்நாள் முழுவதையும் செலவிடுகின்றாள். சரியாகச் சாப்பிடாமல்சரியான நேரத்திற்கு சாப்பிடாமல்தூங்காமல் பிள்ளைகளுக்காகொ பிள்ளை களின் வளர்ச்சிக்காகவே தங்கள் நேரத்தைச் செலவிடும் தாய்மார்கள்தாம் இங்கே அதிகம். தம்பதிகள் இருவரும் இணைந்து குழந்தையை ஆசை



ஆசையாக பெற்றெடுத்தாலும் அவர்களை வளர்க்க வேண்டிய பொறுப்பு பெண்கள் மீது மட்டுமே திணிக்கப்படுகிறது என்பதுதான் உண்மை.

பழங்கால சமூக பழக்க வழக்கங்களில் இருந்து நாம் எவ்வளவு முன்னேறி வந்திருந்தாலும் குழந்தை வளர்ப்பு விஷயத்தில் இன்றளவும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.உலகளவிலும் குழந்தைகளை வளர்ப்பது பெண்களுக்கு கொடுக்கப்பட்ட கடமையாகவே ஆண்களால் பார்க்கப்படுகிறது. பாலின சமத்துவம் அடிப்படை உரிமை என பேசினாலும் பெண்களுக்கான சம உரிமையையும் சமத்துவத்தையும் கொடுக்க இந்த சமூகம் தயாராக இல்லை. இதற்கு முக்கிய காரணம் சமூக அமைப்பில் ஆண் குழந்தைகளுக்கு கொடுக்கப்படும் சிறப்பு அந்தஸ்தும் பெண் குழந்தைகளின் மேல் சிறுவயது முதல் திணிக்கப்படும் கடமைகளும்தான் என்றால் மிகையாகாது. வீட்டு வேலை என்றால் பெண் குழந்தைகள் மட்டுமே செய்ய வேண்டும். ஆண் குழந்தைகளாக இருப்பவர்கள் தங்களின் துணிகளைக் கூட துவைத்துக்கொள்ள மாட்டார்கள் அவர்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்ற சுதந்திரம் பிறப்பிலிருந்து வழங்கப்படுகிறது. குழந்தை பிறந்த பிறகு அவர்களை குளிப்பாட்டுவது முதல் அன்றாடம் கவனித்து கொள்வது வரை முழுவதும் பெண்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்பாக இருக்கிறது. குழந்தைகள் அழுதால் கூட நள்ளிரவில் பெண்கள் எழுந்து தன் குழந்தையை சமாதானம் செய்து தூங்க வைக்க வேண்டும். எல்லா இடத்திலும் ஆண்கள் வெறும் பார்வையாளராக மட்டுமே அநேகமாக இருக்கிறார்கள் என்பது கவலைக் குரியதே .



தாய்மை தியாகம் என்ற சொற்களில் மட்டுமே மனம் குளிர்ந்து போய் பெண்கள் பிள்ளை பெறுவதில் தொடங்கி குழந்தைகளின் ஆரோக்கியம் கல்வி சாதனைகள் குழந்தைகளின் எதிர்காலம் என ஓடி ஓடி உழைத்தே தலை நரைக்க ஆரம்பித்துவிடுகிறது. இதெல்லாம் அவர்களுக்குப் பிரச்னை இல்லை. உங்க பிள்ளை சுத்த தங்கம். இப்படி ஒரு பிள்ளை பிறக்க நீங்க கொடுத்து வைத்திருக்கணும் உங்க பிள்ளை நீங்க வாங்கி வந்த வரம் போன்ற ஓரிரு வாக்கியங்களைக் கேட்க வேண்டும் என்பதே அவர்கள் வாழ்நாள் தவம். அதைக் கேட்பதற்காகவே இங்கே தன் வாழ்நாள் முழுவதையும் பல பெண்கள் தொலைத்துக் கொண்டிருக்கின்றனர் இந்த நவீன காலத்திலும் .



பிரியா இராமநாதன்
(இலங்கை)

இதெல்லாம் ஒரு பிரச்சினையே இல்லை இதெல்லாம் பெண்ணாய் பிறப்பெடுத்தவளின் கடமை அந்த கடமையிலிருந்து இம்மியளவேனும் விலகிவிடக்கூடாது என்கிற வகையில்தான் அன்று தொட்டு இன்றுவரை இந்த சமூகத்தில் பெண் நோக்கப்படுகின்றாள். 'பிள்ளை இருக்கும் வீட்டில் தலை வாரக்கூட நேரமிருக்காது' என்கிற பழைய கருத்தாக்கம் இன்றுவரையில் உலவிக்கொண்டுதான் இருக்கிறது அதாவது பிள்ளைகள்தான் முக்கியம் இனி உனக்காக அல்ல அவர்களுக்காக வாழ்வதே மிகச் சிறந்த வாழ்க்கை' என திரும்பத் திரும்ப சொல்லப்பட்டு அதிலிருந்து இம்மியளவேனும் பெண் நகர்ந்துவிடாதபடி இறுக கட்டப்பட்டுவிடுகிறாள். இந்த தூய்மையான தாய்மை போதையிலிருந்து ஒரு பெண் கொஞ்சமேனும் சுதாகரித்து தனக்காகவும் சிறிது நேரத்தை ஒதுக்க நினைப்பாளேயாயின் அவள் பயங்கர குற்றவுணர்விற்கு உள்ளாக்கப்படுவாள் என்பதே யதார்த்தம். இருபத்து நான்கு மணிநேரமும் குழந்தை பராமரிப்பு வீட்டு பராமரிப்பு என உழன்றுகொண்டேயிருக்கும் பெண் எப்போதாவது அழுத்தம் தாளாமல் வெடித்து குமுறும்போது அந்த நியாயம் எத்தனை பேரின் செவிகளுக்குள் ஏறக்கூடும் ?

தெளிந்த அறிவுள்ள சமூகமாக இருக்கும் இன்றைய காலகட்டத்தில் குழந்தை வளர்ப்பு என்பது ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவானது என சமூகம் உணர வேண்டும். குழந்தையை வளர்க்கும்போது மனைவியின் பொறுப்பு என கணவர்கள் ஒதுங்கிக்கொள்ளாமல் என்னுடைய குழந்தை என்ற பொறுப்பை எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியோடு கவனித்து கொள்ள வேண்டும் என்பதே இங்கே பல இளம் தாய்மார்களது எதிர்பார்ப்பாக இருக்கின்றது .ஏன் யுகம்தோறும் பல தாய்மார்களதும் எதிர்பார்ப்பும் இதுவாகத் தான் இருந்திருக்கக்கூடும். ஆனால் அவர்கள் அதை வாய்விட்டுக் கேட்கவில்லை என்பதுதான் உண்மை.

ஓர் குழந்தை வளரத் தொடங்கும் போதே அம்மாவைப் பார்ப்பதற்கும் அப்பாவைப் பார்ப்பதற்கும் பெரிய வேறுபாடுகளை இயல்பாகவே கற்றுக் கொள்கிறது. அப்பா நல்ல உடைகளை அணிந்து கொண்டு

21 ஆம் பக்கம் பார்க்க...





# ஆச்சி அஃறிணையா உயர்திணையா!

## பிள்ளைகள் வெளீல இருந்து கேக்கினம் என்ன மாதிரி

வியாழக்கிழமை காலமை வழமை போல முதல் நாள் அடிபட்டு வெட்டுப்பட்டு விழுந்து முறிஞ்ச எல்லாரையும் பாத்து முடிஞ்சு Ward ஆல வெளீல வரேக்க வாசலிலை ஒருத்தர் என்னை மறிச்சார். இவர் தான் ஏழாம் கட்டில் நோயாளியோட சொந்தக்காரர் எண்டு நேர்ஸ் சொல்ல நானும் என்ன எண்டு பாத்தன் இல்லை நல்லம்மா ஏழாம் கட்டில் அவவுக்கு என்ன மாதிரி? எண்டு கேட்டார். நான் நிலமையைச் சொன்னன். நீங்கள் யார் எண்டு என்டை கேள்விக்கு பதில் இல்லை ஆனாலும் அவர் பிள்ளைகள் வெளீல இருந்து கேக்கினம் என்ன மாதிரி எண்டு தொடர்ந்தார். ஒப்பிறேசன் செய்ய வேணும் அவவுக்கு இதயம் பலவீனமா இருக்குரத்தம் காணாது ஒழுங்கா மருந்து எடுக்காததால சீனியும் கூடவா இருக்கு ஆழும் சரியான weak உடல் தகுதி முன்னேறினாப்பிறகு தான் செய்யலாம் செய்யாட்டியும் கஸ்டப்படுவா உத்தரிக்க விடேலாது எண்டு சொன்னன்.

அவர் போக அடுத்ததா வந்தா ஒரு ஐம்பதை தாண்டின அக்கா கிட்ட வர முதல் நாசியை முட்டிச்சுது perfume மணம் Excuse me எண்டு தொடங்கினா எட்டாம் கட்டில்ல இருக்கிறது எங்கடை அம்மா தான் எண்டு விசாரிக்க நானும் நிலமையைச் சொன்னன். ஓம் டொக்டர் அம்மாவின்டை நிலமை விளங்குது நாங்கள் மூண்டு பிள்ளைகள் எல்லாரும் வெளீல இருக்கிறம் மாறி மாறி வந்து அம்மாவைப் பாக்கிறனாங்கள் நீங்கள் முயற்சி செய்யுங்கோ மற்றது கடவுள் பாப்பார் எண்டு கதைச்சிட்டு எங்களுக்கும் ஒரு நம்பிக்கயையும் தந்திட்டுப் போனா.

மூண்டு நாளா பல கேள்விகளும் சில பதில்களுமாய் போச்சுது. ஏன் பிள்ளைகள் இன்னும் வரேல்லையா எண்டு நான் திருப்பியும் கேக்கொ இல்லை இப்ப வந்திட்டுப் போய் திருப்பியும் ஏதும் நடந்தா வாறது கஸ்டம் எண்டு யோசிக்கினம் அதான் எண்டு இழுத்துப் பதில் தந்தவரை நிமிந்து பாத்திட்டு நடக்கொ மீண்டும் அந்த perfume அக்கா நாங்கள் ரத்தம் ஒழுங்கு படுத்தி இருக்கிறம் அம்மாவின்டை நிலமை முன்னேற ஒப்பிறேசனை செய்து விடுங்கோ எண்டு சொல்லீட்டு தன்டை அம்மாவின்டை நிலமையை அறிஞ்சு கொண்டு போனா.



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

ஒரு கிழமையால ஒப்பிறேசன் செய்து முடிய அவர் திருப்பியும் வந்தார் இப்ப என்ன மாதிரி எண்டு கேட்ட படி. நிலமை சரியில்லை பிள்ளைகள் வந்தா நல்லம் எண்டு சொல்லொ அப்ப நான் அவையை வரச் சொல்லிறன் எண்டு சொல்லீட்டுப் போகொ பக்கத்து கட்டில் அம்மாவின்டை மகள் வந்து நன்றியை பார்வையால சொல்லீட்டுப்போனா.

அதுக்குப் பிறகு மூண்டு நாளால வாட்டில கொஞ்சம் சலசலப்பு. காலமை பாக்கிற நேரம் முடிஞ்சாப் பிறகு எப்பிடியோ யாரையோ பிடிச்சு உள்ள வந்து அதுகும் கும்பலாச சிலர் வந்துநேர்ஸை ஆயிரம் கேள்வி கேட்டு இல்லாத வசதிகளை விமர்சிச்சு ஏன் நீங்கள் இப்பிடி இருக்கிறீங்கள் எங்கடை ஊரில[?]எண்டால் எல்லா வசதியும் இருக்கு எண்டு புகுந்த ஊர் பெருமையை கூட்டிச் சொல்லீட்டு இன்னும் தமிழன் முன்னேறாததுக்கு காரணங்களையும் கண்டு பிடிச்சு எடுத்து விட்டிச்சினம். அதோட மறக்காம வந்த நினைவாக தனியா selfie யும் குறூப்பா gulfie உம் எடுத்திட்டுப் போச்சினம். முகத்தில பவுடர்உடம்பெல்லாம் கிறீம் கையில flower bouquet வைச்சு படம் எடுத்திட்டு எடுத்த படத்தோட get well soon எண்டு முகப்புத்தகத்தில போட்டு ஊரெல்லாம் காட்டி 20 பெரிவிரல் 30 கும்பிடு கொஞ்சம் கைதட்டல் வாங்கியாரார் என்னென்ன போட்டது எண்டு பூராயம் எல்லாம் நோண்டத் தொடங்கிச்சினம் . வந்த புதுசில மூண்டு நேரமும் வந்தவை மூண்டாம் நாத்து எப்பிடி நிலமை எண்டு கோல் எடுத்துக் கேட்டிச்சினம். நாங்கள் ஒரு trip போறம் ஏதும் எண்டால் இந்த நம்பருக்கு எடுத்துச் சொல்லுங்கோ எண்டு போனவை திருப்பி வரேக்கையும் ஆச்சி அப்பிடியே இருந்தா. எட்டாம் கட்டில் கார அம்மாவை ஒவ்வொரு நாளும் ஆள் மாறி மாறி அக்காவும் தங்கச்சிமாரும் நிண்டு பாத்து ஏதோ கோயிலில அபிசேகம் வைச்ச எண்டு ஒரு நாள் வீபூதியோட பொங்கல் பிரசாதமும் கொண்டு வந்து தந்திச்சினம்.

இவ்வவளவு நாளும் டொக்டரை காணேல்லை வசதி சரியில்லை வாங்கு சரியில்லை எண்டு சொன்னவை இப்ப டொக்டர் எவ்வளவு நாள் தாங்கும் எண்டு கேக்கத்தொடங்கிச்சினம் .

28 ஆம் பக்கம் பார்க்க...



Tel:0179 2310 560 Wolbecker Str.16a 48155 Münster (Eingang von Bremer Platz neben Parkhaus Ausgänge)



கொலம்பியா நாட்டில் வன்முறையால் இறக்கும் இளைஞர்களின் எண்ணிக்கை கூடிய வண்ணம் உள்ளது. cemetery இல் Red Cross இறந்தவர்களை அடையாளம் காண உதவி புரிகிறது.



venezuela அகதிகள் அதிலும் பெண்கள் படும் கஷ்டங்கள் தொடர்பாக உரையாடும் போது.



# ஒவ்வொரு சவாலுக்கும் ஒரு தீர்வு காணும் போது வளர்ச்சி தானாகவே வந்துவிடுகிறது!

## சுபா உமாதேவன் (சுவிட்சர்லாந்து)



நேர்கண்டவர்:
**கல்லாறு சதீஸ்**
(சுவிட்சர்லாந்து)

சுபா உமாதேவன் தேவதை எனும் தினத்தந்தியின் இதழின் அட்டைப்படத்தை மட்டுமல்லொவெற்றிமணியின் அட்டைப்படத்தையும் [01.11.2018] அலங்கரித்தவர் ஆண்டுகள் உயர அவரின் வளர்ச்சி அதனையும் விட உயர்வடை வது மகிழ்ந்த ஆச்சரியத்திற்குரியதுமீண்டும் வெற்றிமணி சுவிட்சர்லாந்தின் புகழ்மிக்க லுசேர்ன் பல்கலைக்கழகத்தின் ஆலோசகராக ஈழத்து தமிழ் யுவதி சுபா உமாதேவன் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவரை இங்கு நேர்கண்டு கேள்வி பதிலாக வழங்குவதில் வெற்றிமணி பெரு மகிழ்ச்சியடைகிறது.

**கேள்வி: கடந்த மாதம் எல்லாம் தமிழ்ச் சமூக ஊடகங்கள் உங்களை உச்சி முகர்ந்து கொண்டாடியதைப் பார்த்தோம் இதுபற்றி உங்களின் எண்ணவோட்டம் என்னவாக இருந்தது?**

**பதில்:** மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. பாராட்டுக்கள் எனக்கு என்றும் ஊக்கமளிக்கும். அதுவும் உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் உறவுகள் மனம் நிறைந்து வாழ்த்தியது எனக்கு மட்டுமல்ல என் பெற்றோருக்கும் மனம் பூரிப்படைந்தது.

**கேள்வி:உங்களைப்பற்றி எமது புதிய வாகர்களுக்குக் கூறுவீர்களா?**

**பதில்:** எனது பெற்றோருடன் இரண்டு வயது சிறுமியாக சுவிஸ் நாட்டில் புகலிடம் தேடினோம். நான் வளர்ந்தது சுவிஸ் நாட்டின் தலைநகரான பேர்ண் நகரில். கனடாவில் அரசியல் சர்வதேச விவகாரங்கள் மற்றும் Spanish மொழியில் bachelor (Ottawa university) முடித்து பின்பு Masters degree சர்வதேச சட்டம் மற்றும் சர்வதேச விவகாரங்களில் ஜெனீவாவில் (Swiss) முடித்தேன். பல் கலைக்கழக கல்வி முடித்து சர்வதேச நிறுவனங்களில் பல நாடுகளில் வேலை செய்யும் வாய்ப்பு கிடைத்தது. இன்று தலைமை நிர்வாக அதிகாரியாக இருக்கிறேன்.



**கேள்வி:உங்களின் இன்றைய பணிகள் பற்றி விளக்கமாகக் கூறுவீர்களா?**

**பதில்:** இன்று பணியாற்றும் நிறுவனத்தின் பெயர் ட்றோசோஸ் (DROSOS). DROSOS கிரீக் மொழியில் காலை பனி என பொருள் படும்.

இந்த நிறுவனம் 2003ம் ஆண்டு உருவாக்கம் பெற்று வருடம் 50 மில்லியன் வரையிலான தொகையில் அபிவிருத்தி திட்டங்களை செலவிட்டு வருகிறோம். இப்போது சரியாக ஒரு வருடமாக இந்த நிறுவனத்தை தலைமை (CEO) தாங்குகிறேன். எங்களுக்கு 200கும் மேற்பட்ட திட்டங்கள் இருக்கின்றன. அனைத்துலக ரீதியாக வளர்ந்து வருகிறோம். இளையோரின் வளர்ச்சி அவர்கள் சுய தொழில் செய்யும் வாய்ப்பு கொடுப்பதே எங்களுடைய நோக்கம் ஆகும்.

10 ஆம் பக்கம் பார்க்க...








சென் சிலுவை சங்க பணியாள் உலகம் முழுதும் வேலை செய்யும் பல **ICRC** ஆட்களுடன் பேசும் பழகும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. மிககும் ஆச்சர்ய பட வைக்கும் அவர்களுடைய அனுபவங்கள்...




**Jordan** நாட்டில் அகதிகள் சம்பந்தமாக பேசும் போது...



சுய தொழில் செய்யும் பெண்கள். இவை அனைத்தும் **drosos** என்னுடைய நிறுவனத்தின் உதவியுடன் நடக்கிறது

என்னுடைய வேலை எனக்கு மனதுக்கு பிடித்த மாதிரி அனைவருக்கும் உதவும் ஒரு பணியாக அமைந்து விட்டது. நான் வேலை என்பது மறந்து கடமை ஆற்றுவேன். உலகில் அனைவருக்கும் சரி சமனாக வாய்ப்பு கிடைத்தால் எதுவும் சாதிக்க முடியும். இளையோரில் நம்பிக்கை வைக்க வேண்டும். இன்று நாம் எதிர்கொள்ளும் சுற்றாடல் மற்றும் புதிய பிரச்சனைகளுக்கு புதிய தீர்வு தேவை அது சிறுவர் மற்றும் இளையோர் கையில் உள்ளது. அதற்கான வாய்ப்பை தான் நான் தலைமை தாங்கும் நிறுவனம் கொடுக்க முயற்சிக்கிறது.

**கேள்வி: செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதியாக பல நாட்டில் பயணப்பட்ட உங்களின் படிப்பினையான அனுபவங்கள் என்ன?**

**பதில்:** சென்ற ஆண்டு Colombia [தென் அமெரிக்கா] நாட்டிற்கு சென்றிருந்தேன். அங்கு அரசு படையினருக்கும் ஏனைய குழுக்களுக்கும் மத்தியில் மோதல்கள் நடந்து வருகின்றன. ஒரே நேரத்தில் ஐந்து ஆயுத போராட்டங்கள் இன்று நடந்து வருகிறன்றது. இதில் அதிகம் பாதிக்கப்படுவது பொது மக்கள் தான். இதன் மத்தியில் கொரோனா வைரஸ் பரவி மக்களுக்கு மென்மேலும் பிரச்சனை. சென்சிலுவை சங்கத்தின் துணை ஜனாதிபதியும் நானும் கொலம்பியா நிலவரத்தை பார்வையிடவும் மக்களுடனும் பேச சென்றிருந்தோம். அங்கு ஆயுத போராட்டத்தால் பாதிக்கபட்ட குடும்பங்கள் மற்றும் முக்கியமாக பெண்களை சந்தித்திருந்தோம். Cucuta, Puerto Santander, Tibu என்னும் Colombia, Venezuela எல்லைப்பகுதிகளில் கொலம்பியா மக்கள் உள்நாட்டு பிரச்சனையால் படும் அவலத்தையும் Venezuela அகதிகள் எல்லைப்புறத்தில் படும் கஷ்டங்களையும் கண்டிருதோம். இதில் முக்கியமாக இளம் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களையும் ஆயுத குழுக்கள் கொடுக்கும் கஷ்டத்திலும் மிகவும் பாதிக்க பட்டிருக்கிறார்கள். எவ்வாறு நாம் உதவலாம் அரசாங்கத்து




டன் விழிப்புணர்வு கொண்டு வரலாம் என்பதே எமது நோக்கமாக இருந்தது.

**கேள்வி: உங்களின் இன்றைய இந்த உயரம் திட்டமிடலா? தற்செயலா?**

**பதில்:** தற்செயலே. ஒவ்வொரு படியும் வளர்ச்சி படி. என்றும் முன்னோக்கி பார்ப்பதே இன்று நான் இருக்கும் நிலைக்கு காரணம். ஒரு பிரச்சனையை கண்டால் அதற்கு தீர்வு காண்பது என்னுடைய தன்மை. சுவிஸ் வெளியுறவு அமைச்சகத்தில் தூதுவராக வேலை செய்யும் விருப்பதோடே அனைத்துலக தொடர்புகள் மற்றும் அரசியல் படித்தேன். ஆனால் ஐக்கிய நாடுகள் சபையிலும் நான் வேலை செய்த ஏனைய நாடுகளிலும் தேவை இருப்பது மக்களுக்கு அதற்கு மிகவும் முக்கிய திட்டங்களை வகுத்து செயல்படுவது ஒவ்வொரு நாட்டிலும் இருக்க கூடிய grassroots [அடிமட்ட] அமைப்புகள். அந்த அமைப்புகளை வளர்த்து விடுவது மக்களுக்கு செய்யும் பெரிய பணியாகும். இவ்வாறு குழந்தைகள் இளையோர்கள் பெண்கள் என அவர்களுக்கு என்ன என்ன தேவை இருக்கிறதோ அதை நோக்கியே என்னுடைய பயணம் அமைந்தது. ஒவ்வொரு சவாலுக்கும் ஒரு தீர்வு காணும் போது வளர்ச்சி தானாக வருகிறது.

**கேள்வி:எமது இன்றைய இளம் தலைமுறை நாளை உங்களைப் போல் வெற்றிபெற நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?**

**பதில்:** மனதுக்கு பிடித்த விடயம் அது உலகில் ஒரு நோக்கம் அடைவதற்கு பயன் பாடாக இருக்க வேண்டும். பணத்துக்காக மாத்திரம் வேலை



செய்யும் சூழல் மாறி இன்றைய இளையோர்கள் கேட்கும் கேள்வி என்ன வேலை எனக்கு திருப்தியை தருகிறது. வெற்றி என்பது அவர்கள் மனதை பொறுத்து இருக்கிறது சமுதாயம் பார்க்கும் பார்வை மாத்திரம் அல்ல. இளம் தலை முறையினர் எந்த இடத்தில் முக்கிய தீர்மானங்கள் எடுக்க படுகின்றனவோ அந்த உயர் பதவிகளுக்கு வர வேண்டும். ஒரு தனி மனிதரால் மாற்றம் உருவாக்க முடியும். எங்கள் மத்தியில் சாதிக்க எவ்வளவோ பேர் பிறந்து இருக்கிறார்கள் அதற்கு வாய்ப்பு ஊக்கம் கொடுக்க வேண்டும்.

**கேள்வி: எம் சமூகம் ரீதியாக தடைகள் இருக்கின்றனவா?**

**பதில்:** என்னுடைய இந்த தனிப்பட்ட அனுபவத்திலும் ஆப்பிரிக்காவில் என்னுடைய வேலை அனுபவம் ஊடாகவும் எனக்கு தெரியும் மற்றவர்களின் மனநிலை சிந்தனையை மாற்றுவதற்கு எவ்வளவு பொறுமை மற்றும் தைரியம் வேண்டும் என்று. அதுவும் சமூகத்தில் வலுவாக தடம் பதித்து இருக்கும் விடயங்களை மாற்றுவது என்பது மிகவும் கடினம். தமிழ் சமூகத்தில் பெண்களை பார்க்கும் விதமும் ஆழமாக எங்கள் மத்தியில் பதிந்து விட்டது. ஆண் பிள்ளைகள் பெண் பிள்ளைகள் என வேறு வேறு எதிர்பார்ப்பு இருப்பது உண்டு. பெற்றோருடன் உரையாடுவது எங்களுடைய பார்வையை விளங்க படுத்துவது பெற்றோருடைய பார்வையையும் புரிந்து கொள்வது – மிகவும் முக்கியம். பெண் பிள்ளைகளுக்கு உங்களுடைய இலக்கு வாழ்க்கையில் என்ன அடைய விரும்புகிறீர்கள் என்பது தெரிய வேண்டும். அதை பெற்றோருக்கு சொல்லி நம்பிக்கையை உருவாக்குங்கள்.

மேலும் இந்த உரையாடலில் ஆண்களின் பங்கு என்ன? என்னுடைய பெரிய ஆதரவாளர்கள் என்னுடைய அப்பாவும் தம்பியும் என் வாழ்கை துணையும் தான். நாம் அனைவரும் இணைந்து ஒரு புதிய உலகை படைக்க முடியும். புரிந்து உணர்வு தான் முக்கியம். மனிதரை மனிதராக பார்க்க பழகி கொள்வோம். எனக்கு நம்பிக்கை இருக்கிறது நாம் புதிய தமிழர்களாக எதிர் வரும் சமுதாயத்துக்கு முன்னுதாரணமாக ஒற்றுமையாக வாழ்வோம் என்று.




**'The House of Bernarda Alba'**
**ஒரு பாலை வீடு**



# எனது நாடக அனுபவங்கள் 16

**ஆனந்தராணி பாலேந்திரா (UK)**



# ஒரு பாலை வீடு நாடகம்- 1980

இலங்கையில் 1975ஆம் ஆண்டு ஆரம்பித்த எனது மேடை நாடகப் பயணத்தில் 1980இல் நான் நடித்த எட்டாவது நாடகம் 'ஒரு பாலை வீடு'. இப்பொழுது திரும்பிப் பார்க்கும்போது எனக்கே மிகவும் ஆச்சரியமாகவிருக்கிறது. பெருமையாகவும் இருக்கிறது. தமிழ்ப் பெண்கள் மேடையில் ஏறி நடிப்பதற்குத் தயங்கிய ஒரு காலகட்டத்தில் அதுவும் யாழ்ப்பாணத்தில் வசித்துக்கொண்டு ஒரு இளம்பெண்ணாக இத்தனை நாடகங்களில் நடித்திருக்கிறேன். எல்லாமே முழுநீள நாடகங்கள். 'பசி' நாடகத்தைத் தவிர. இலங்கையின் பல பாகங்களிலும் கிட்டத்தட்ட 50 மேடையேற்றங்கள்.

நடிப்பின் மேல் உள்ள என்னுடைய ஆர்வத்துக்குத் தடை போடாமல் கேலிப் பேச்சுகளுக்கு அஞ்சாமல் எனக்கு முழுச் சுதந்திரம் அளித்து பக்கபலமாக இருந்த எனது பெற்றோரை மிகவும் நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன். ஒருவேளை அவர்களும் அந்தக் காலத்து சாதாரண அப்பாக்கள் அம்மாக்கள் போல என்னை நடிக்க விட முடியாது என்று சொல்லியிருந்தால் சிலவேளைகளில் நான் எதிர்த்து சண்டையிட்டிருப்பேன் என்றுதான் நினைக்கிறேன். மிகச் சிறுவயதில் இருந்தே எனக்குப் பிடிவாதமும் துணிச்சலும் அதிகம் என்று பெற்றோர் சொல்லுவார்கள். நினைத்ததை எப்படியும் சாதிக்கும் பழக்கமும் இருந்தது.

தமிழ் நாடகங்களில் நடிப்பதற்கு ஒரு பெண்ணைக் கண்டுபிடிப்பதே மிகக் கடினமாக இருந்த அந்தக் காலகட்டத்தில் 20க்கும் மேற்பட்ட பெண்கள் நடித்த நாடகம்தான் 'ஒரு பாலை வீடு'. ஆச்சரியம்தான். இந்த நாடகத்தை க.பாலேந்திரா நெறியாள்கை செய்திருந்தார். பாலேந்திரா துணிச்சலோடு காரியமாற்றுவதில் வல்லவர். 20 பெண்களை வைத்து நாடகம் தயாரிப்பது என்பது இலேசான காரியமல்ல. அதுவும் யாழ்ப்பாணத்தில் தயாரிப்பு. ஆனாலும் அவர் துணிந்து விட்டார்.

ஸ்பெயின் நாட்டின் பிரபல கவிஞரும் நாடகாசிரியருமான பெடரிகோ கார்சியா லோர்கா எழுதிய 'The House of Bernarda Alba' என்ற நாடகத்தின் மொழிபெயர்ப்புத்தான் 'ஒரு பாலை வீடு'. கார்சியா லோர்கா இந்த நூற்றாண்டின் தலைசிறந்த ஸ்பானியக் கவிஞராகவும் நாடகாசிரியராகவும் கருதப்படுகிறார். இவர் கவிஞராகப் புகழ்பெற்ற பின்னர் நாடகத்துறையில் ஈடுபாடு காட்டினார். இவருடைய கவிதைகளும் நாடகங்களும் சாதாரண மக்களின் வாழ்வைப் பின்னணியாகக் கொண்டவை. 1898 இல் பிறந்த கார்சியா லோர்கா இந்த நாடகத்தை 1936இல் எழுதினார். அதே ஆண்டு ஸ்பெயினில் நடந்த உள்நாட்டுப் போரின்போது இவர் கைப்பற்றப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார். 50 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஸ்பெயினின் கிராம வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இந்த நாடகம் 80களில் எமது வாழ்க்கைச் சூழலுக்குப் பொருந்தியதாக இருந்தது. இந்த நாடகத்தைத் தமிழில் நிர்மலா மொழிபெயர்த்திருந்தார்.

'ஒரு பாலை வீடு' நாடகத்தை பாலேந்திரா 1979ஆம் ஆண்டு நெறியாள்கை செய்து மேடையேற்றியிருந்தார். நான் 80ஆம் ஆண்டு இதன் மீள் தயாரிப்பில்தான் நடித்தேன். முதல் தயாரிப்பில் முழுக்க முழுக்க யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவிகளே நடித்திருந்தார்கள். பாடசாலை நிதிக்காக அப்பாடசாலை மண்டபத்திலேயே மேடையேற்றப்பட்டது. 9 முக்கிய பாத்திரங்கள் உட்பட சுமார் 20 பெண்கள் நடித்தார்கள். இவர்கள் 70 வயதில் இருந்து 20 வயதுவரை இருந்தார்கள். நான் நினைக்கிறேன் அந்தக் காலத்தில் இத்தனை தமிழ்ப் பெண்கள் நடித்த முதலாவது மேடை நாடகம் இதுவாகத்தான் இருக்க வேண்டும்.




சுண்டுக்குளி நாடகத் தயாரிப்பிலும் மேடையேற்றத்தின்போதும் பாலேந்திரா என்னைத் தனக்கு உதவி செய்யுமாறு கேட்டு நானும் பல ஒத்திகைகளுக்குச் சென்றேன். அப்போது நான் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். பாலேந்திரா கொழும்பில் வேலை செய்து கொண்டிருந்தார். வார இறுதி நாட்களில் யாழ்ப்பாணம் வருவார். பின்னர் நீண்ட விடுமுறையில் வந்திருந்து ஒத்திகைகளைச் செய்தார். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்திலேயே ஒத்திகைகள் நடந்தன. இரண்டு மணித்தியால நாடகம் என்றபடியால் நீண்ட ஒத்திகைகள் மாலை வேளைகளிலும் சனி-ஞாயிறு தினங்களிலும் நடைபெற்றன. பாலேந்திராவின் கட்டுப்பெத்தை பல்கலைக் கழக நண்பர்கள் சிலர் அவருக்குக் கடைசிநேர ஒத்திகைகளில் உதவி செய்ய வந்திருந்தார்கள். பாலேந்திரா உட்பட எல்லோருமே இளைஞர்கள். பாடசாலை விடுதியில் தங்கியிருந்த உயர் வகுப்பு மாணவிகள் ஒத்திகைகளைப் பார்க்க வருவார்கள். அவர்களில் சிலர் நாடக ஒத்திகைகளை மட்டுமல்லாது இந்த இளைஞர்களைப் பார்க்க வருவதையும் நான் அவதானிக்கத் தவறவில்லை.

இந்தத் தயாரிப்பில் நடித்த பல பெண்கள் சமூகத்தில் உயர் அந்தஸ்தில் இருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் வசித்தபோதும் இவர்களில் சிலர் ஆங்கிலத்திலேயே பெரிதும் உரையாடும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு ஆரம்பத்தில் தமிழில் பேசி நடிப்பது கொஞ்சம் சிரமமாக இருந்தது. கடும் பயிற்சியின் பின்னர் பழகிக் கொண்டார்கள். 'ஒரு பாலை வீடு' நாடகத்தில் ஆண் பாத்திரங்களே இல்லை.

14 ஆம் பக்கம் பார்க்க...




## 08 ஆம் ஆண்டு நினைவு நாள்

**தனபாலசிங்கம் தியாகராஜா. (எழுவைதீவு)**

**பிறப்பு: 24.04.1961 இறப்பு: 01.03.2014**

திதி வளர்பிறைப் பிரதமை
வியாழக்கிழமை 03.03.2022 யேரமன் (எஸ்ஸன்)

நான் சாயும் இடம்எல்லாம்
உங்கள் தோளென எண்ணிக்
கற்பனை செய்கின்றேன்.
நீங்கள் கை பிடித்து நடந்த நாட்கள்
எல்லாம் நிகர்இல்லாத நினைவுகள் அப்பா!!
விழாமல் நடப்பேன்என்ற
நம்பிக்கையில்தானே! என் கையைத்
தனியே விட்டீர்கள் அப்பா!!
இன்று நாள் விழுந்து விழுந்து
எழுகின்றேன் உங்கள்கை
எனக்கு இல்லை அப்பா!!
சிறுவலியும் தெரியாது நானும்
வளர்ந்தேன் ! இன்று உங்கள் உயிரபிரிந்த
வலியை நானும் சுமந்தன்!!
அப்பா நீங்கள் என்றென்றும் என்னையும்
அம்மாவையும்வழிநடத்துங்கள்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக மாவை
முருகனை வேண்டி நிற்கும்
மனைவி.பாரதா,மகள் கார்த்தனா


## 21 ஆவது ஆண்டு நினைவுப் பூக்கள்!



**செல்வி கஜனி தேவராஜா**
(பிறேமன், ஜெர்மனி)
மலர்வு:12.05.1988
பிரிவு 16.03.2001

அன்பின் திருவுருவே! அருமைக் கஜனியம்மா!
சொல்லாமல் நீ பிரிந்த துயர் இன்னும் நீங்கவில்லை.
ஆண்டுகள் 21 ஆனதம்மா இப்போது!
அருமைக் கஜனி! உந்தன் அன்புமுகம் எங்களுக்குள்
நிலையாகி உந்தன் நினைவுகளை வளர்க்கிறது!
என்றும் பிரியாத எமதருமைக் கண்மணியே!
சக்திபதம் நீயடைந்து சாந்தியுறும் நாளிதனில்
கண்ணீரை உந்தனுக்குக் காணிக்கையாக்குகிறோம்!
அன்பே நீ அமைதி பெறு ஆதிசக்தி நிழலினிலே!

என்றும் உன் நினைவுகளுடன்
அம்மா, அப்பா, அக்கா, அத்தான்
எஸ்.தேவராஜா (இங்கிலாந்து)




மகளிர் தின வாழ்த்துக்கள் ( பங்குனி 08 )




# என்ன வைத்திருக்கிறோமோ அது நாகரிகம் என்னவாக இருக்கிறோமோ அது பண்பாடு

இன்று உலகம் முழுவதும் பரவலாகப் பேசப்படும் கருப்பொருள் பெண் அடிமை பெண் சுதந்திரம். இது ஏன் பேசப்படுகின்றது? இது இன்று தேவைதானா? என்ற கேள்வி பலர் மத்தியில் இருக்கின்றது. இதற்கு விடை தேடும் வினாக்கள் எனக்குள்ளும் எழுகின்றன. பெண் சுதந்திரம் பெண் விடுதலை என்ற சொல்லாடலை உடைத்தெறியும் கருவி மனித மனங்களிலேயே இருக்கின்றன. மனிதத் தோற்றக் காலங்கள் தன்னடக்கம் மன அடக்கம் இருபால் வேற்றுமை இன்மை எதிர்பாலார் பற்றிய புரிந்துணர்வு காதல் காமம் பற்றிய புரிதலும் அவசியமும் போன்றன மனித மனதில் ஆழாக ஊறியிருந்தால் அன்றி இவ்வார்த்தைகளை நாம் எடுத்தெறிய முடியாது.

பண்பாடு கலாசாரம் என்ற போர்வையிலே அதீதமாகப் பெண்களைப் புகழ்வது போல் புகழ்ந்து அடிமைத் தனத்தை ஏற்படுத்துவது கண்கூடு. மக்களது அறிவுநலம் கருத்து நலம் குணநலம் கொள்கை நலம் ஒழுக்க நலம் வாழ்க்கை நலம் முதலியன மேலும் மேலும் வளர்ந்து திரிந்து வரும் முறையையே மேத்யூ ஆர்னால்ட் பண்பாடு என்கிறார். மனம் ஆன்மா ஆகியவற்றின் அகநிலையைத் தருகின்ற நிறைவைப் பற்றிப் படிப்பது என்கிறார். என்ன வைத்திருக்கிறோமோ அது நாகரிகம் என்னவாக இருக்கிறோமோ அது பண்பாடு. எம்முடைய நாகரிகமும் பண்பாடும் உலகமயமாக்கலினால் கலந்துபட்டுக் கிடக்கிறது. இந்த காலகட்டத்தில் பெண்மையை ஒரு போகப்பொருளாகக் காணும் ஆண் வர்க்கத்தின் மனநிலை மாற்றப்பட வேண்டியது அவசியம். தற்போது பெண்களின் காலப் படிமுறைகளைச் சற்றுப் பின்னோக்கிப் பார்ப்போம்.



மனிதஇனம் தோன்றி நாடோடியாகத் திரிந்து உணவுப் பொருள்களைச் சேகரித்த நிலையிலிருந்து மாறி உணவுப் பொருள்களை ஒரு இடத்திலே தங்கி உற்பத்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது பெண்களே நிலாக் கிழார்களாக நில வேளாண்மை நடத்தியவர்களாக காணப்பட்டனர். இதனாலேயே பூமியைப் பூமாதேவி என்று சொல்லும் வழக்கம் இருந்தது. பெண்களின் உயிர்ப் போக்கற்ற இரத்தப்பெருக்கு கர்ப்பக் காலங்கள் போன்றவை காடு மேடு சுற்றித் திரிவதற்கு இடையூறாக இருந்த காரணத்தினால் இயற்கை அவர்களுக்கு அளித்த வரத்தை உற்பத்திப் பயன்பாட்டுக்குப் பயன்படுத்தி நிலக்கிழார் ஆகினர். அக்காலகட்டத்தில் தாய்வழி சமுதாயமே இருந்தது. தாய்வழி சமுதாயத்திலே காதுகுத்தும் விழா பூப்பு நீராட்டுவிழா திருமணவிழா போன்ற விழாக்களில் தாய்மாமனுக்கே முதலுரிமை வழங்கப்பட்டது. தாய்ப்பெயரைப்



பெண்களுக்கு முதல் பெயராக வைத்தல் தாய்த்தெய்வ வழிபாடு முதன்மையாகவும் காணப்பட்டன. முருகனை கொற்றவை சிறுவன் என்று அழைக்கப்பட்ட நிலைமை பிற்கால சங்ககாலத்திலே தந்தை வழி சமுதாய அமைப்புத் தோன்ற முருகனைப் பெற்றவள் வழிபாடாக மாறியது. அக்காலத்தில் ஆண்களின் ஆதிக்கம் முற்றாக இல்லாத காரணத்தினால் காதல் திருமணங்கள் சிறப்புற்று இருந்தன. அன்று தவமிருந்து பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்த மரபினை

> ‘‘குன்றக் குறவன் கடவுள் பேணி
> இரந்தனன் பெற்ற
> எல்வளைக் குறுமகள்
> ஆயரி நெடுங்கண் கலுழச்
> சேயகால் தெய்ய
> நீ பிரியும் நாடே’’

என்ற ஐங்குறு நூற்றுப்பாடல் எடுத்துக் காட்டுகின்றது. வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்த நிலைமை அக்காலத்தில் இருந்ததில்லை. பெண்கள் தினை புலங்காத்தல் உப்பு மோர் மீன் போன்றவை விற்றமை கணவனுடன் சேர்ந்து மது அருந்துதல் [ஐரோப்பாவில் இன்று றடிநெ அருந்துதல்] ஆண்களுடன் சேர்ந்து கைகோர்த்து விளையாடுதல் கடலில் காதலனுடன் சேர்ந்து நீராடுதல் நிலத்தொழில் செய்தல் போர்க்களம் செல்வது போன்று ஆணுக்கு நிகராகப் பெண்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்று இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இதனை

> துணைப் புணர்ந்த மட மங்கையர்
> பட்டு நீக்கித் துகில் உடுத்தும்
> மட்டு நீக்கி மது மகிழ்ந்தும்
> மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்

என பட்டினப்பாலை சான்று பகர்கின்றது. திருமணம் செய்கின்ற போது மணமகன் மணமகளின் பெற்றோருக்கு முலைக்கூலி வழங்கப்பட்ட.து. அந்த அன்பளிப்பை வழங்கியமை அகநானூறு புறநானூறு ஆகிய பாடல்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

> முழங்கு கடல் முழவின் முசிறியன்ன
> நலம்சால் விழுப் பொருள் பணிந்து
> கொடுப்பினும்
> புரையர் அல்லோர்
> வரையலள் இவள் எனத்
> தந்தையும் கொடா அன்

இவ்வாறு மணமகளுக்கு பரிசுப் பொருள்கள் வழங்க முடியாத மணமகன் அவர்களுடைய வீட்டிலே இருந்து தொண்டு செய்து தான் கொடுக்க வேண்டியதை தொண்டின் மூலம் ஈடு செய்வதுண்டு. இம்முறை ஆரிய வருகையின் பின் வரனுக்குரிய காணிக்கை வரதட்சணை என்றும் ஸ்ரீதனம் எனப்படும் பெண்ணோடு கொடுக்கப்படும் பொருள் சீதனம் என்றும் ஆணுக்குப் பெண்வீட்டார் கொடுக்க வேண்டும் என்னும் முறை வழக்கத்தில் வந்தது. வட இந்தியாவில் இருந்து தென்னிந்தியா புகுந்த சைன

28 ஆம் பக்கம் பார்க்க...






# "போற்றித்தாய்"



முதன் முறையாக இலங்கையில், தாய் சேய் இணைந்து பரதநாட்டிய அரங்கேற்றம் கண்ட வரலாற்றுப் பெருமை கொழும்பில் இயங்கி வரும் அபிநயக்ஷேத்திரா நடனப்பள்ளியையே சாரும்.

அன்பின் மொழி பயின்று ஆன்மாவின் வெளி காட்டி ஆடல் மந்திரம் அருளிய குருவைத் தாய் எனப் போற்றி தாள் பணிந்து , 20/02/2022 அன்று புதிய கதிரேசன் மண்டபத்தில் நித்யா, ஷ்ருதி இருவரதும் போற்றித்தாய்' அரங்கேற்ற நிகழ்வு இடம் பெற்றது

பிரபஞ்சத்தின் சக்தி அன்பு. இவ்வுலகில் பிறந்த உயிர்கள் யாவும் அன்பெனும் பெரும் பொருளை முதலில் பெறுவது தாயிடமே. அன்பே சிவம். அதுவே திருமந்திரம் அரங்கேற்ற நிகழ்வில் முதல் உருப்படியாக புஷ்பாஞ்சலியுடன் அலாரிப்பு இடம் பெற்றது. துவி இராகம், துவி தாளம் , துவி ஜாதி என மார்க்க உருப்படி அமைப்பின் உச்சம் முதல் உருப்படியிலேயே புலப்படட்டுவிட்டது.

**" அம்மா நம் இசைச் சொல்"**

தொடர்ந்து நான்கு அட்சரப் பெயர் கொண்ட தாய் நித்யாவும் மூன்று அட்சரம் கொண்ட சேய் ஷ்ருதியும் இணைந்து தம் அங்க மலர் அர்ச்சனையை சமர்ப்பித்தால் திஸ்ரம், சதுஸ்ரம் இணை துவிஜாதி அலாரிப்பாக அமைத்துள்ளார் குரு திவ்யா சுஜேன்.

**" அம்மா நம் மலர்ச்சொல்"**

தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே .

உள்ளும் புறமும் உள்ளதெல்லாம் ஒன்றாகி தன்மை எல்லாம் தானாகி தன்மை ஒன்றிலாததுவாய் காண்பார் தாம் காட்சியாய் எல்லாம் தானாகி இருக்கும் தாயுமானவரை அறியக் கூடியவர் மட்டுமே உண்மையை அறிந்தவராகின்றனர்.

தாய் ராகமான சங்கராபரணம் ராகத்திலும் மிஸ்ர சாபு தாளத்திலும் ஜதீஸ்வரம். அமைந்தது அம்மா நம் திருச் சொல்.

தாயிற் சிறந்த கோயிலும் இல்லை .

அன்னையெனும் ஆலயத்தில் சிலையாகி நிற்கும் குழந்தை ஒரு இன்ப வரம். தேவகி வயிற்றினில் பிறந்தாலும் கண்ணனுக்கு யசோதை தாய் தானே ? பிரிந்தே வளர்ந்தாலும் கர்ணனின் தாய் குந்தி தானே ? நெற்றிக்கண்ணில் பிறந்த முருகனை கார்த்திகை பெண்கள் வளர்த்ததும் தன் குழந்தையாய் பிறர் குழந்தையைக் கருதும் ஒவ்வொருவரும் தெய்வம் ஆகின்றனர் என்பதனை சுட்டிக்காட்ட உமை அம்மை திருஞானசம்பந்தருக்கு ஞான பால் கொடுத்ததும், என தானே சுமந்து பெற்றாலும், இல்லையெனிலும் தாய்மையின் பண்பில் மாற்றமில்லை என்பதனை கருவாக கொண்ட வர்ணனம் இராகமாலிகையாக இடம்பெற்றது.

**அம்மா நம் களிச் சொல்.**

சங்க இலக்கியத்தில் ஆய், ஞாய், அன்னை, நற்றாய், ஈன்றாள், என்ற பெயரில் தாய் அழைக்கப்படுகிறாள். அதிலும் செவிலித்தாயின் முக்கியத்தும் பெரிதும் பேசப்படுவது சங்க இலக்கியத்தில் தான். தவறான புரிதல், உறவுச் சிக்கல் , முரண்பாடு , சிறிய சிக்கலுக்கும் பெரும் பிணக்கு இவையே இன்றைய நிலை. ஆனால் சங்க இலக்கியங்கள் உறவு ஓவியங்கள். நாம் என்னும் சிந்தையுடன் அன்பு பொங்க நுண்ணிய புரிதலை கற்றுத்தரவல்லன.

நாகரீக வாழ்வியலையும், நற் பண்பையும், மற்றவரை பாராட்டுவதையும், செவிலித்தாய் கூற்று நம் சங்க இலக்கியங்களை நாட்டியத்தினூடாக மீட்டிப் பார்க்கும் முயற்சியாகிறது. நற்தாய் செவிலித்தாய் இருவரதும் உரையாடல் தாய்மையின் மாண்பினை காண்பிக்கிறது. இன்றைய காலத்திற்கு அதிகம் தேவையான ஓர் அரும் பொருளாய் நம் தாய் மொழி தந்த சங்க இலக்கியம் இருப்பதாய் உணர்ந்து கூடலூர் கிழார் பாடிய அற்புதமான சங்கப்பாடல் குறுந்தொகை செவிலித்தாய் கூற்று ஆடல் வடிவம் பெற்றது.

**அம்மாநம் ஆதிச் சொல்.**

நாம் அச்சம் கொண்டோம் .
தாய் அதனை நீக்கி உறுதி தந்தாள்
நாம் துயர் கொண்டோம் தாய்
அதை மாற்றிக் களிப்பு தந்தாள்
குனிந்த தலையை நிமிர்த்தினாள்
சோர்ந்த விழியில் ஒளி சேர்த்தாள்
கலங்கிய நெஞ்சிலே
தெளிவு தந்தாள்
இருண்ட மதியிலே ஒளி
கொடுத்தாள்

நவமெனச் சுடர் தரும் நல் அறிவு தந்து நவதுர்கையாக அருளியதை தத்ரூபமாக காட்சிப்படுத்திய ஆடல் அடுத்து இடம்பெற்றது.

**அம்மா நம் வண்ணச் சொல்.**

சுருதியும் லயமும் இணைந்தால் பிறக்கும் திவ்யமான இசையை கருதி தேர்ந்தால் வாழ்வில் இன்பம் நித்தியமே என கோரக் கல்யாண் ராகத்திலும் ஆதி தாளம் துவி நடையிலும் அமைந்த தில்லானா போற்றிதாய் நாட்டிய மார்க்கத்தின் இறுதி நிகழ்வாக அமைந்தது.

**அம்மா நம் நிறைவுச் சொல்**

மகாகவி சுப்பிரமணிய பாரதியின் கொள்ளு பெயரன் இசை மேதை டாக்டர் ராஜ்குமார் பாரதி ஐயாவின் இசையமைப்பில் பாடலாக்கத்தில் குரு திவ்யா சுஜெனின் நெறியாள்கையில் ஸ்ருதியும் நித்தியாவும் வழங்கிய ஆடலால் ஐம்புலனும் இன்புற்று நிறைய , அம்மா என்னும் அமுதச் சொல்லை போற்றித் துதித்து, மூதாய்களுக்கு சமர்ப்பணமாய் இனிதே நிறைவு பெற்றது போற்றிதாய்.



# ஒரு பெண்ணுக்கு திருமணத்துக்குப் பின் பெற்றோர் நினைப்பு குறையுமா கூடுமா?





ரஜினா தர்மரட்ணம் (யேர்மனி)

அன்பு, பாசம், காதல் என்றுமே குறையாத உணர்வு. ஆனால் பெற்றோரின் நினைப்பு திருமணம் ஆன புதிதில் குறைய வாய்ப்புகள் உண்டு. கணவனின் அக்கறை காதல் மற்றும் அவரின் நினைப்பு மேலோங்கி இருப்பதனால் பெற்றோரின் நினைப்பு அச்சமயத்தில் குறைந்துவிடும். கணவருக்குப் பிடித்த உணவுகளைச் செய்ய வேண்டும் என்கிற நினைப்பு இருக்கும். அவருக்குப் பிடித்ததைச் செய்யத் தோன்றும். அந்த சமயத்தில் பெற்றோருடன் தொடர்பு குறைந்துவிடும். நிறைய நேரம் கணவனுடன் கழித்து விடுவார்கள்.

ஆனால் எமக்காக எவ்வளவு செய்த எங்கள் அம்மா அப்பா நினைப்பு குறையுமா? இல்லை! குறையக்கூடாது. சுயநலம் இல்லா அன்பு உள்ளவர்கள் பெற்றோர்கள். அவர்களை விட்டுக்கொடுக்கவும் கூடாது விடவும் கூடாது.

திருமணத்துக்கு முன் அம்மா கூடுதலான வீட்டு வேலைகளைச் செய்வார். ஆனால் திருமணத்துக்குப் பின் அம்மாவா வந்து எங்கள் வீட்டில் செய்யமுடியும்? அப்பொழுது அம்மா பட்ட கஷ்ரம் நினைப்புக்கு வரும். உடல்நலம் குறைவாக இருக்கும் போது அம்மாவும் அப்பாவும் அக்கறை காட்டியது மறக்கமுடியுமா? பெற்றோரைப் பிரிந்து இருக்கும் பொழுது தான் அவர்களின் அன்பு அதிகமாகப் புரிகிறது. ஒன்றாக இருக்கும் போது தெரியாது பிரிந்து வந்த பின் அவர்களின் அருமை தெரிகிறது.

எங்களுக்கு பிள்ளைகள் பிறந்த பின்பு தான் எங்கள் பெற்றோர்கள் பட்ட கஷ்ரங்களை முழுமையாக உணரமுடிகிறது. அவர்கள் மேல் இருக்கும் பாசம் மேலும் அதிகரிக்கும். ஒரு தாயாக ஆன பின்னே தான் ஒரு பெண்ணுக்கு தன் தாயின் தியாகம் புரியும். திருமணத்துக்குப் பின்னரே அதனால் பெற்றோரின் பாசத்தை உணரமுடிகிறது. அவர்களை நாம் சிலசமயங்களில் வேதனை படித்தியுள்ளோம். அவற்றை நினைக்கும்போது மனதுக்கு வலிக்கிறது.

பெற்றோருடன் ஒரே வீட்டில் வாழ்ந்த நாங்கள் ஒருபோதும் திருமணத்துக்குப் பின் அவர்களை கைவிடக்கூடாது. திருமணத்துக்குப் பின் கணவரே தாயும் தந்தையுமாக இருக்கிறார். இவ்வன்பினாலே தான் பெண்களால் பிறந்தவீட்டை விட்டு புகுந்த வீட்டில் மகிழ்ச்சியாக வாழ முடிகிறது.

11 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஒரு பாலை வீடு....

முழுவதும் பெண்கள்தான். ஒரு ஆண் பாத்திரம் அவர் ஒரு இளைஞன். அவர்களுடைய உரையாடலில் அடிக்கடி வருவார். ஆனால் மேடையில் தோன்றமாட்டார்.

சுண்டுக்குளி மேடையேற்றம் மிக வெற்றியாக நடந்தது. பாலேந்திரா நாடகங்கள் மீண்டும் மீண்டும் மேடையேற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். தொடர்ந்த நாடக மேடையேற்றங்களே தீவிர நாடக இயக்கத்தை வலுப்படுத்தும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்.

அதனால் ‘ஒரு பாலை வீடு’ நாடகத்தை யாழ்ப்பாணத்தில் வீரசிங்கம் மண்டபத்திலும் கொழும்பு பேராதனை போன்ற இடங்களிலும் மேடையேற்ற விரும்பினார்.









# வெற்றிமணியின் அச்சாணியாக உள்ளவர் ஜெயபவானி சிவகுமாரன்!

**வாழ்நாள் பேராசிரியர் இலக்கிய கலாநிதி அ.சண்முகதாஸ்– (இலங்கை)**

பங்குனி மகளிர் தினத்தன்று வெற்றிமணிக்கு இன்னொரு வெற்றி தேடிவருகின்றது. தன்னுடைய பெயரிலேயே ‘வெற்றி’யைக் கொண்டுள்ள ஜெயபவானி சிவகுமாரன் வெற்றிமணியின் கௌரவ அசிரியராக வருகிறார். இது வரை முகங்காட்டாது பெயர் பொறிக்காது வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி சிவகுமாரனுக்கு 28 ஆண்டுகளாகத் துணையாக இருந்தவர் அவர். அப்படி இருந்தவரை எனது வெற்றிக்குப் பின்னால் யார் யார் என்பதில் என் மனைவியும் ஒருவர் என்பதை வெற்றிமணி வரலாற்றில் பதிவிட பங்குனி மாதம் திருமதி ஜெயபவானி சிவகுமாரன் அவர்களை கௌரவ ஆசிரியராக நியமித்து வெற்றிமணி கௌரவிக்கின்றது.’ என்று வெற்றிமணி அறிவிக்கின்றது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பயிற்றப்பட்ட ஆசிரியையாகிய திருமதி சிவகுமாரன் அவர்கள் 1984 வரை வவுனியா ரம்பைக்குளம் கொன்வென்ற் மகளிர் கல்லூரியில் ஆசிரியையாகப் பணியாற்றியவர். பின்னர் யேர்மனியில் 28 ஆண்டுகளாக பின்னணியில் நின்று வெற்றிமணி வெளிவரவும் ஒவ்வோராண்டும் விழாக்கோலம் கொள்ளவும் பணிசெய்தவர். விழாக் கோல விருந்தினர்களை அவர் எவ்வாறு உபசரித்தார் என்பதை நாம் இருவரும் நேரடியாகப் பட்டறிந்துகொண்டோம்.

சிவகுமாரனுக்கும் எங்களுக்குமுள்ள தொடர்பு அவருடைய தந்தையாருடன் தொடங்கியது. அவர்தான் வெற்றிமணியைத் தொடக்கியவர். குரும்பசிட்டி பரமானந்தா கல்லூரியின் அதிபராக இருந்தவர் திரு. சுப்பிரமணியம் அவர்கள். அவர் ஒருதடவை என்னையும் மனோன்மணியையும் பரிசளிப்பு விழாவுக்கு பிரதம விருந்தினராக அழைத்துச் சிறப்புச் செய்தவர். அன்று தொடக்கம் அவருடன் தொடங்கிய நட்பு அவர் மகன் ஊடாக இன்னும் தொடர்வது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. சிவகுமாரன் குடும்பம் ஒரு கலைக்குடும்பம். இதற்கு அச்சாணியாக உள்ள அவரது துணைவியார் ஜெயபவானி அக்குடும்பத்தின் அடையாளமான வெற்றிமணியை சிறப்புற வழிநடத்துவார். அவருக்கு எங்கள் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

**✱வாழ்நாள் பேராசிரியர் இலக்கிய கலாநிதி அ. சண்முகதாஸ்**

**✱ யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம். பேராசிரியர் முனைவர் ச. மனோன்மணி**

**✱ முன்னாள் ஆய்வுப் பேராசிரியர் கக்சுயின் பல்கலைக் கழகம் யப்பான்.**

## இருபத் தெட்டு ஆண்டுகளாய் அறிவுப் பணியை ஆற்றிவர் !

*சிந்தனை முழுதும்*
*மனிதத்தை*
*ஆழியாய் ஊற்றி*
*நிரப்பியவர்*

*காயம் நல்கா*
*சொல்மட்டும்*
*வாழ்க்கை முழுதும்*
*விதைக்கிறவர்*

*மென்மை தன்னை*
*வாழ்வியலாய்*
*நாளும் பொழுதும்*
*நடத்துபவர்*

*விருந்தோம்பல் எனும்*
*தமிழ்ப் பண்பை*
*கடல்கள் கடந்தும்*
*தொடர்கிறவர்*

*தாய்மண்ணில்*
*கல்விப் பணியில்*
*சிறப்பாக*
*மாணவர் நலனைப்*
*பேணியவர்*

*தமிழை வளர்க்கும்*
*பணிக்காக*
*செல்வம் தன்னை*
*ஊற்றியவர்*

*வெற்றியின் பாதை*
*வெற்றிமணி*
*நடந்திட துணையாய்*
*வருகிறவர்*

*குமரனைக் காக்கும்*
*தாயுமவர்*
*உயிரெனக்*
*காக்கும் தாரம் அவர் !*

**வாழ்த்துகிறோம்**
**திருமதி ஜெயபவானி**
**சிவகுமரன் அவர்களே !**

**வாழிய நீவீர் பல நூறாண்டு**
**தருகிறோம் உமக்கு**
**செந்தமிழ் செண்டு**

(சேவியர் தமிழ்நாடு)

# வெற்றிமணியின் கௌரவம் பெறும் ஜெயபவானி சிவகுமாரன் அவர்களை வாழ்த்துகிறோம்

**கவிஞர் வி.கந்தவனம் (கனடா)**

பிரபல பத்திரிகை வெற்றிமணி யேர்மனியில் இருந்து கடந்த 28 ஆண்டுகளாக வெளிவருகின்றது. இப்பத்திரிகை வெற்றிகரமாக வெளிவர வெற்றிமணி ஆசிரியர் சிவகுமாரன் அவர்களின் மனைவி ஜெயபவானி சிவகுமாரன் அவர்களின் ஒத்துழைப்பும் காரணமாகிறது. 1995 ஆண்டு வெற்றிமணிஎனக்கு யேர்மனியில் மணிவிழா எடுத்த காலங்களில் இருந்து இன்றுவரை அவரை நான் நன்கு அறிவேன்.

பத்திரிகைக்கு வேண்டிய உதவிகள் புரிவதும். இன்முகத்தோடுவிழாவிருந்தினரை வரவேற்பதும் யாவரும் அறிந்ததே. ஒரு ஆசிரியராகொ இலங்கையில் பணியாற்றிய காலத்தில் மாணவர்கள் மீது கொண்ட பாசம் இன்று அவர்கள் வளர்ந்து பெரிய பொறுப்புகளில் இருந்தபோதும் அவர்கள் இவர் மீது தமது அன்பை வெளிப்படுத்த தவறுவதே இல்லை. இன்று பங்குனி மாதம் மகளிர் சிறப்பிதழில் கௌரவ ஆசிரியராக வெற்றிமணி கௌரவம் செய்வது பொருத்தமானதே. அவர் நலத்துடன் இருந்து வெற்றிமணிக்கு உறுதுணையாக இருந்து சேவையாற்ற மனமார வாழ்த்துகிறேன்.

**அன்புடன்**
**வி. கந்தவனம்.**







# பெண்கள் நேற்று! இன்று!! நாளை!!!



சேவியர்
(தமிழ்நாடு)

## நடுப்பக்கம்

## 'பெண்கள் வீட்டின் கண்கள்'

**இது** ஒரு அதரப் பழசான ஒரு மொழியாக இருக்கலாம். ஆனால் எந்தக் காலத்திலும் மாறாத மொழி! சகோதரிகளோடு வாழ்ந்தொ வாழ்கின்ற அனைத்து ஆண்களும் இதை கண்ணை மூடிக்கொண்டு ஒத்துக் கொள்வார்கள்.

ஒரு வீட்டில் சகோதரிகள் இருந்தால் அந்த வீடு அன்பினால் கட்டமைக்கப்படுகிறது. அந்த வீடு மகிழ்வினால் கட்டமைக்கப்படுகிறது. அந்த வீடு சிரிப்பினால் நிரப்பப்படுகிறது. அந்த வீடு மதிப்பீடுகளால் உருவாக்கப்படுகிறது. இவையெல்லாம் மிகைப்படுத்தலுக்காகச் சொல்லவில்லை எனது வாழ்வின் அனுபவத்திலிருந்து சொல்கிறேன்.

சகோதரிகள் இல்லாத இல்லம் உண்மையிலேயே எதையோ இழந்திருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். சகோதரிகளோடு பிறந்தவர்கள் சமூக வெளியில் மிக சகஜமாக பெண்களை தங்கள் சகோதரிகளாகப் பாவிக்கக் கற்றுக் கொள்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் மங்கையர் தினம் வரும்போது பெண்களைப் பற்றிய சிந்தனைகளும் தலைதூக்கும். பெண்களைப் பற்றிய கவிதைகள் ஸ்டேட்டஸ்களை நிரப்பும் பெண்களைப் பற்றிய பொன்மொழிகளும் கட்டுரைகளும் இணைய தளங்களை நிரப்பும். பெண்களைப் பற்றிய பாடல்கள் இண்ஸ்டாவிலும் யூடியூபிலும் குவியும். அவை மட்டும் போதுமா?

பெண்களுடைய வாழ்க்கை நேற்று எப்படி இருந்தது? இன்று எப்படி இருக்கிறது? நாளை எப்படி இருக்கும்? என்பதைப் பற்றிய சிந்தனைகள் பல வேளைகளில் நமக்கு உற்சாகத்தையும் சில வேளைகளில் நமக்கு சோர்வையும் தருகின்றன.

இன்னும் பெண்கள் அடைய வேண்டிய தூரம் மிக அதிகம் எனும் உண்மையை நமக்கு காலம் உணர்த்திக் கொண்டே இருக்கிறது.

சொல்லப் போனால் தமிழ் இன வரலாற்றில் பெண்கள் மிக உயர்ந்த இடத்தில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்திருக்கிறார்கள். தாய் வழிச் சமூகம் தமிழ் வரலாற்றில் மிகச் சிறப்பாக இருந்திருக்கிறது. தாயை முன்வைத்தே தலைமுறை அட்டவணைகள் உருவான வரலாறுகள் உண்டு.



பெண்களைத் திருமணம் முடிக்கும் ஆண்கள் பெண்ணின் வீட்டிலேயே தங்கி வாழ்கின்ற ஒரு சமூக அமைப்பு முறையும் அன்று இருந்தது. சொத்து பெண்களுக்குச் செல்கின்ற ஒரு மாபெரும் புரட்சியும் அந்தக் காலத்திலேயே இருந்தது.

பெண் கவிஞர்களின் சிறப்புகளைப் பற்றி நாம் அறிவோம் பெண்களை மையமாக வைத்து எழுதப்படும் நூல்களைப் பற்றி நாம் அறிவோம் பெண்களை தெய்வமாகவும் அறத்தின் வடிவமாகவும் பார்க்கின்ற புதினங்களையும் நாம் அறிவோம். இவையெல்லாம் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெண்கள் தமிழினத்தின் தலை நிமிர் வடிவங்களாய் இருந்தார்கள் என்பதற்கான சான்றுகள்.

எனவே பெண்கள் அன்று விழுந்து கிடந்தார்கள் இன்று பறந்து திரிகிறார்கள் என கவித்துவமாய் சொல்வதில் அர்த்தமில்லை.

உண்மையில் இன்றைக்கு பெண்கள் அப்படியொன்றும் பெரிய உயரிய நிலையை எட்டிவிடவில்லை. பெண்கள் வேலைக்குப் போகலாமா வேண்டாமா என்பதை கணவன் முடிவு செய்ய வேண்டும் எனும் சட்டம் உலக நாடுகள் 18ல் இன்றும் இருக்கிறது !

உலக நாடுகள் 39 ல் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான சொத்துரிமை என்பது கிடையாது ! பெண்களை வன்முறையாளரின் கையிலிருந்து பாதுகாக்கும் சட்டம் சுமார் 49 நாடுகளில் கிடையாது !

உலக அளவில் சுமார் 20 சதவீதம் பெண்கள் திருமணமான ஒரு ஆண்டுக்குள்ளாகவே கணவனாலோ கணவன் வீட்டாராலோ

17 ஆம் பக்கம் பார்க்க...





# பெண்கள் நேற்று! இன்று!! நாளை!!!

துன்புறுத்தப்படுகிறாள் என்கிறது ஒரு புள்ளி விவரம். அத்தகைய நிலையிலிருந்து அவர்களைக் காப்பாற்ற சரியான சட்டம் இன்னும் சுமார் 49 நாடுகளில் இல்லை.

சர்வதேச அளவில் அரசியல் களத்தைப் பார்த்தால் பெண்களின் பங்களிப்பு 23.7 விழுக்காடு நிலையில் தான் இருக்கிறது. உலக அளவிலுள்ள நில உடமைகளில் வெறும் 13 விழுக்காடு மட்டுமே பெண்களின் பெயரில் இருக்கிறது.

இப்படி உலக அளவில் தெரிகின்ற புள்ளி விவரங்கள் நாம் செல்ல வேண்டிய தூரம் இன்னும் அதிகம் என்பதை நமக்கு விளக்குகிறது.

ஆனால் பெண்களின் வாழ்க்கைத் தரம் கடந்த சில பத்தாண்டுகளில் பெருமளவு வலுவடைந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. பெரியார் போன்ற பல சமூகத் தலைவர்களின் எழுச்சி மாபெரும் மாற்றத்தை கல்வித் தளத்தில் உருவாக்கியது. ஏற்றத்தாழ்வுகளையும் பாகுபாடுகளையும் கடந்து பெண்கள் கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேற அது உதவியது.

கல்வி வேலை அரசியல் பங்களிப்பு நிர்வாகம் தொழில் இலக்கியம் என எல்லா இடங்களிலும் பெண்களின் இருப்பும் பெண்களின் பங்களிப்பும் இனி வரும் காலத்திலும் வளரும் என்பதில் சந்தேகமில்லை.

பெண்களுக்கு என சில இயல்புகள் உண்டு அவை ஆண்களுக்குக் கிடையாது. உதாரணமாக குடும்பத்தைக் கட்டியெழுப்பவும் பிள்ளைகளைப் பாதுகாக்கவும் உறவுகளைப் பேணவும் பெண்களுக்கு இருக்கின்ற லாவகம் ஆண்களுக்கு கைவராத கலை. அதனால் தான் பெண்கள் பெரும்பாலும் குடும்பத்தின் பின்னால் இருந்து இயக்க கூடியவர்களாக இருந்தார்கள்.

ஆண்கள் சமூகத்தின் முன்னால் நின்றார்கள். அவர்களுடைய பங்களிப்பு உடல் உழைப்பு சார்ந்தும் அதிகாரம் சார்ந்தும் இருந்தது. அதனால் அவர்கள் மேலானவர்கள் என முடிவு செய்யவும் கூடாது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள உடல் உளவியல் சார்ந்த இயல்பு அவர்களை இயக்குகிறது என வைத்துக் கொள்ளலாம்.

இதயம் வெளிப்பார்வைக்குத் தெரியவில்லை எனவே அது குறைந்த மதிப்பு கொண்டது கரம் வெளிப்பார்வைக்குத் தெரிகிறது எனவே அது அதிக மதிப்பு கொண்டது என சொல்ல முடியுமா என்ன ?

பெண்கள் எல்லா இடங்களிலும் நுழைவதில் எந்தத் தவறும் இல்லை. அதே போல அவர்கள் வீடுகளை ஒரு சின்ன சொர்க்கமாக மாற்றும் பணியை மட்டும் செய்கிறார்கள் என்றால் அதில் எந்த இழிவும் இல்லை என்பதே புரிந்து கொள்ள வேண்டிய உண்மையாகும்.

இப்படி வாழ்ந்தால் தான் மதிப்பு இப்படிப் பேசினால் தான் மதிப்பு இப்படி நடந்து கொண்டால் தான் மதிப்பு என பல பெண்கள் தவறான உதாரணங்களைக் கொண்டு தங்களுடைய வாழ்க்கையை அமைக்கப் பார்க்கிறார்கள். அதனால் பல வேளைகளில் நிராசையும் மன உளைச்சலும் அவர்களை நிரப்புகிறது.

நாம் நாமாக இருப்பதே மிகச் சிறப்பானது ! நமது வாழ்க்கை மகிழ்வாக இருக்க வேண்டும் என்பதே முக்கியமானது. அதற்குத் தேவையானவற்றை நாம் செய்ய வேண்டும்.

பெண்கள் அன்பினால் கட்டமைக்கப்பட்டவர்கள் அவர்கள் இருக்கின்ற இடத்தில் மகிழ்வும் அன்பும் நிரம்பியிருக்கும். அத்தகைய பெண்களுக்கு எதிராக வன்முறைகள் கொடுமைகள் போன்றவை நடப்பது ஆண்களுடைய இயலாமையின் வெளிப்பாடு. சமூகத்தில் ஒரு பெண் அல்லல் படுகிறாள் என்றால் அந்த சமூகத்திலுள்ள ஆண்கள் தான் அதற்காக வெட்கப்பட வேண்டும். சமூகத்தில் பெண் தலைகுனிகிறாள் என்றால் அது ஆணின் தோல்வி என்றே புரிந்து கொள்ள வேண்டும். பெண்கள் நேற்று எப்படி இருந்தார்கள் இன்று எப்படி இருக்கிறார்கள் என்பதெல்லாம் வரலாற்றுக் குறிப்புகளே. நாளை எப்படி இருக்க வேண்டும் என்பதே தேவையான சிந்தனை !




பெண்கள் ஒரு சமத்துவ சமூகத்தைக் கட்டியெழுப்பும் கருவிகளாக இருக்க வேண்டும். அவர்களால் மட்டும் தான் அது முடியும். காரணம் அவர்கள் தான் வீடுகளைக் கட்டமைக்கிறார்கள். வீடுகளில் அவர்கள் விதைக்கின்ற விதைகள் தான் சமூகத்தில் விளையும். எனவே மிகச் சிறந்த ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் அறைகூவலை அவர்கள் எடுக்க வேண்டும்.

பெண்கள் அடுத்த தலைமுறையை அன்பினால் கட்டியெழுப்ப வேண்டும். ஒரு உயிரிலிருந்து உயிரை வெளியே எடுத்தால் பிணம் என்பார்கள். பெண்களையோ தாய் என்பார்கள். அந்தத் தாய் குழந்தைகளை வளர்க்கும் போது அவர்களை அவர்கள் செய்யப் போகும் பணியை நோக்கி வளர்த்தாமல் அவர்கள் வாழப்போகும் வாழ்வை நோக்கி வளர்த்த வேண்டும்.

குழந்தைகளின் குணாதிசங்களைக் கட்டியெழுப்ப வேண்டும். மதிப்பெண்களை நோக்கிய ஓட்டம் அல்லொ மதிப்பீடுகளை நோக்கிய ஓட்டமே முக்கியமாய் இருக்க வேண்டும். மனிதனாய் வாழ்வதே முக்கியம் என்பதை உணர வேண்டும். அதை பெண்கள் மட்டுமே செய்ய முடியும்.

பெண்கள் தங்கள் தன்னம்பிக்கையை பெருமளவு வளர்த்த வேண்டும். பெண்களை பின்னுக்கு இழுப்பவை தேவையற்றவற்றில் அவர்கள் செலவிடும் நேரம் தான். அது சீரியலாகவும் இருக்கலாம் கிசு கிசுவாகவும் இருக்கலாம் அல்லது அது போன்ற ஏதோ ஒன்றாகவும் இருக்கலாம்.

முறத்தால் புலி விரட்டிய பெண்மை அறத்தால் நாடாண்ட பெண்மை திறத்தால் தமிழ் வளர்த்த பெண்மை தங்கள் தன்னம்பிக்கையை நீர்த்துப் போகச் செய்யக் கூடாது. சமூக வெளியில் தாங்கள் சம உரிமை படைத்தவர்கள் எனும் சிந்தனை இருக்க வேண்டும்.

**பெண்கள் மகிழ்வாக இருக்கும் குடும்பம் செழிக்கும்.**
**பெண்கள் மகிழ்வாக இருக்கும் சமூகம் செழிக்கும்.**
**பெண்கள் மகிழ்வாக இருக்கும் தேசம் செழிக்கும்**

**பெண்மையைப் போற்றுவோம்!**
**பெண்மையைப் போற்றுவோம்**



# லூர்ட்ஸ் மாதா புனிதப் பயணம் 2022

April, July, August மாதங்களில்

எமது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க
பஸ் மூலம் செல்ல ஒழுங்கு செய்து உள்ளோம்.
எமது சேவையின் சிறப்பை முன்னர்
பயணித்தவர்கள் நன்கு அறிவர்.
பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்புகளுக்கு:
முருகா K.Muruga Handy: (49) 0175 850 1489







# தற்காக்கும் சகிப்புத்தன்மையின் அவசியம்

“திறன் அல்ல தன் பிறர் செய்யினும் நோ நொந்து அறன் அல்ல செய்யாமை நன்று.’’
நேர்மை அல்லாததைத் தனக்குப் பிறர் செய்யினும் மனம் வருத்தத்தால் தூண்டப்பட்டு அறன் அல்லாததைச் செய்யாமல் சகிப்புத் தன்மையோடு இருத்தல் நன்று. **(திருக்குறள்)**

சகிப்புத் தன்மை என்றால் என்ன? உள்ளதை உள்ளபடி ஏற்றுக்கொள்ளல் இசைந்து போதல் இப்படி எடுத்துக் கொள்ளலாம். பொறுமை அமைதி நிதானம் போன்றவை சகிப்புத்தன்மையோடு ஒன்றிணைந்தவை என்றாலும் பொறுமைக்கும் சகிப்புத்தன்மைக்குமிடையே சிறு வித்தியாசம் உண்டு. சூழ்நிலை காரணமாக மனம் ஏற்றுக் கொள்ளாமல் கடைப்பிடிக்கப்படும் பொறுமை அழுத்தமாக மாறும் ஏற்றுக்கொண்ட பொறுமை சகிப்புத்தன்மையாக மாறும்.

எந்தவொரு பாகுபாடுமின்றி ஏற்றத் தாழ்வு இன்றி பெரியவர் சிறியவர் என்ற வயது வித்தியாசமின்றி சக மனிதனை மதித்து நடந்துகொள்ளும் போது சகிப்புத்தன்மை எமக்கு மட்டுமல்ல எதிரில் உள்ளவருக்கும் உருவாகும் அதனைவிட பிறர் மரியாதையற்று நடந்துகொள்ளும் போதும் எமக்கான நற்பண்புகளிலிருந்து மீறாமல் அத்தகையவருக்கும் மதிப்பு வழங்கும் போது சகிப்புத்தன்மை வளருகின்றது. ஒருவர் எவ்வாறு உள்ளாரோ அதில் எம் எதிர்பார்ப்புகளைத் திணிக்காது அவ்வாறே ஏற்றுக் கொள்வதும் முடியாதவிடத்து அமைதியாக விலகியிருப்பதும்கூட சகிப்பு தன்மையாகும். மன்னிக்கும் மனப்பாங்கும் தியாகமான உள்ளமும் அதி உச்சநிலையில் சகிப்புத் தன்மையை வளர்க்கும். தாக்குவதற்காக வருபவரை கூட இன்முகத்தோடு அன்பாக எதிர்கொள்வதால் எதிராளியின் மனநிலையோடு அந்த சூழ்நிலையே மாறிவிடும். தன் கருத்தை தன் இடத்தை தக்கவைக்க வேண்டும் என்ற பயமே கோபத்தின் வெளிப்பாடாகும். கோபத்தின் அடிப்படை பயம். தன்பக்கம் நியாயம் இருப்பினும் இல்லாது விடினும் கோபத்தின் அடிப்படை பயமாகும். குடும்பத்தில் கூட அகங்காரமாக நடந்து கொள்பவர்கள் தன் கட்டுப்பாட்டை மற்றவர்கள் மீறிவிடக்கூடாது என்ற பயம் உடையவர்கள்.

பயம் மற்றும் மன உளைச்சல் என்பது சகிப்புத் தன்மையின் எதிர்மறையான விடயங்களாகும். அவை பார்வைக்கு அமைதியாக தெரிந்தாலும் அகத்தே பெரும் சுழலை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். தனக்கே தன்னை விரோதியாக்கிவிடும். வெறுமனே வாழ்வை சாட்சி பாவமாக கவனித்து அமைதி பேணாதவிடத்து எண்ணங்களும் செயல்களும் பெருகிக்கொண்டே விரிந்து செல்லும்.

ஒரு பலூனுக்குள் எவ்வளவு காற்றை நிரப்ப வேண்டும் என்ற அளவு உண்டு மேலதிகமானால் அது வெடித்துவிடும். அது போலவே சகித்துக்கொண்டு கடந்துவிட முடியாத விடயங்கள் பலமான அழுத்தங்களை ஏற்படுத்தி மிகப்பெரும் சிதைப்பை ஏற்படுத்தும். வருவது வரட்டும் என்று அமைதியாக இருந்து ஒவ்வொரு விடயங்களிலும் புதுப்புது அனுபவங்களைப் பெற வேண்டும். மன அழுத்தங்கள் ஏற்படுத்தும் வகையில் ஆழமாக எண்ண ஓட்டங்களை சுழல விடாது சம்பவங்கள் ஒவ்வொன்றையும் ஏற்றுக்கொள்ளும் போது துயரப்பட வைக்கும் மனநிலை அமைதியாகிவிடும். அங்கு பயம் நெருங்கவே முடியாது.

இரும்பை எந்தவொரு பொருளாலும் அழிக்க முடியாது தானே துருப்பிடித்து அழிந்தாலொழிய. சுய பச்சாதாபம் என்பது தன்னை தானே கூறு போடும் முட்டாள்த்தனம். தன் சினம் மற்றும் தன் எதிர்பார்ப்பும் கண்டுகொள்ளப்படாமல் போகும் போது வருவது சுய பச்சாதாபம். தான் வஞ்சிக்கப்படுகிறேன் என்ற மனநிலையானது எப்போதுமே ஏற்படுமாயின் வாழ்வில் எதன் மேலும் யார் மீதும் நம்பிக்கை ஏற்படாது. உண்மையில் தனது



**கரிணி**
(யேர்மனி)

மனமானது தனக்கே எதிராக செயற்படுவதால் தன்னால் தானே பலமாக வஞ்சிக்கப்பட்டு இயல்பு வாழ்வினையே வாழ முடியாத பயந்த சுபாவத்துடன் இரவையும் பகலையும் கழிக்க நேரிடும். இத்தகைய மனமானது பகலில் தனக்கெதிரான எண்ணங்களை கொண்டிருப்பதை போல இரவுக் கனவுகளில் அத்தகைய கொடிய காட்சிகளையும் கொண்டிருக்கும். அங்கு தோன்றும் சாத்தான்கள் கல்லறைகளில் இருந்து எழுந்து வந்தவையல்ல. நிச்சயமாக எதிர்மறை எண்ணங்களிலிருந்து தோன்றி வந்தவையேயாகும்.

மூளையில் சேர்த்து வைத்த நினைவுப்பதிவுகள் அப்படியே உறைந்து இருந்துவிடப் போவதில்லை அவை எம்மில் சக்தியை உறிஞ்சிக் கொண்டு எம்மோடு பேசி செயல்வடிவம் பெறத் துடிக்கும். விழித்திருக்கும் தருணத்தில் அசைபோட்டும் உறங்கும் தருணத்தில் கனவுகளாகவும் பேசி கனவிலாவது செயல்வடிவத்தில் நிகழ்த்திவிடும். அத்தகையது மனம். இந்த மனதில் எதிர்மறையான எண்ணப்பதிவுகளை சேமித்து வைத்தல் என்பது சொந்தச் செலவில் தனக்கே சூனியம் வைத்துக் கொண்டமைக்கு சமம்.


காத்திருத்தலே காலத்தின் கனிகளைப் பெற்றுத்தரும். அடுப்பில் இருந்து இறக்குவதற்கு முன்னதாகவே எடுத்தெடுத்து உண்ணும் பழக்கம் போன்றவற்றை குழந்தைகளுக்கு சொல்லித்தர கூடாது. அவர்களை காத்திருக்க அனுமதிக்க வேண்டும். பழக்கப்படுத்த வேண்டும். அது சகிப்புத் தன்மையை வளர்க்கும். காத்திருக்க பழகிவிட்டாலே வாழ்வில் ஏற்படும் இக்கட்டான துயர சமயங்களில் கூட அதற்கான தீர்வு உண்டாகும் என்ற பொறுமையோடு சகிப்புத்தன்மை வளர்ந்துவிடும். அதி வேதனையில் முரட்டுத்தனமாக தன்னைத் தானே வஞ்சித்து செய்யும் தற்கொலையை கூட சகிப்புத்தன்மை தடுத்துவிடும்.

மாற்றவே முடியாத விடயங்களை சகித்துக் கொள்ளுதல் வேண்டும். எதிராக போராடினாலோ அல்லது மனதில் போட்டு அழுத்தினாலோ பாதிப்பு மட்டுமே உருவாகும். சகித்துக் கொள்ளுமிடத்து அதன் முடிவு இன்பமயமானதாக இருக்கும். ஒரு கருவினை சுமக்கும் தாயின் சகிப்புத்தன்மையினை போலொ அத்தகைய

27 ஆம் பக்கம் பார்க்க...






# நிலவே எம்மிடம் நெருங்காதே!

**நிலா நிலா ஓடி வா...? வேண்டாம் வராதே!**

நிலா நிலா ஓடி வா, நில்லாமல் ஓடி வா முதல் நிலாவே வா, செல்லாதே வா வரை சந்திரனை அழைத்துப் படிக்கப் படும் பாடல்கள் எவ்வளவோ இருக்கின்றன. இந்த நிலா ஒரு நாள் நாங்கள் எல்லோரும் ஆசையாக அழைக்கின்றோம் என்று நமது பூமியை நோக்கி வந்தால் என்ன நடக்கும்? என்ன புரியவில்லையா? நமது பூமியைச் சுற்றிச் சுற்றி வரும் சந்திரன் ஒரு நாள் திடீரென்று பூமியில் வந்து விழுந்தால் என்ன நடக்கும்? இதற்குரிய பதிலை அறிய விரும்பினால் கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்.

சந்திரன் பூமியிலிருந்து சுமார் 384.000 km தூரத்தில் தன் பாட்டுக்குத் தன்னைத் தானே மற்றும் நமது பூமியையும் சுற்றி வருகிறது. எனவே மேலே குறித்தது போல் சந்திரன் நமது பூமியில் வந்து விழுவதற்கு சுமார் 384.000 km தூரத்தைச் சுழன்று சுழன்று கடந்து வர வேண்டும். சரி, இப்படிச் சுழன்று வந்து பூமியைத் தாக்கச் சரியாக ஒரு வருடமாகும் என்று எடுத்துக்கொள்வோம். இந்த ஒரு வருடத்தின் முதலாவது மாதத்தின் முதல் சில நாட்களில் குறிப்பிடத்தக்கதாக ஒன்றுமே இருக்காது. சந்திரன் ஒரு கொஞ்சம் பிரகாசமாக ஜொலிக்கக்கூடும் அவ்வளவு தான். ஆனால் நாட்கள் போகப் போக இந்த முதலாவது மாதத்திலே மூன்று மீட்டர் உயரைத்தைக் கொண்ட அலைகள் கடற்கரைகளைத் தாக்க ஆரம்பித்து விடுவன. இதுவே சந்திரன் தொடர்ந்து பூமிக்கு அருகே வர வர கடற்கரைகள் மட்டுமில்லாமல் கிராமங்களிலும் நகரங்களிலும் உப்பு நிறைந்த கடல் நீர் பரவ ஆரம்பித்துவிடும்.

இரண்டாவது மாதத்தில் நகரங்களை வந்தடையும் அலைகளின் உயரம் 10 மீட்டரைத் தாண்டி விடும். கடற்கரைப் பகுதிகளில் வாழும் சுமார் 100 கோடி மக்கள் தமது இல்லங்களை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் உருவாகிவிடும். அது மட்டுமில்லாமல் கப்பல்கள் பயணிக்க இயலாத நிலைக்கு வந்து விடும். இதன் விளைவாக மனிதர்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் ஒன்றுமே ஒரு நாட்டிலிருந்து இன்னுமொரு நாட்டிற்குக் கொண்டு செல்ல இயலாத நிலைமை உருவாகிவிடும். இது எல்லாமே போதாது என்று இந்த நவீன உலகின் கருவாகிய இணையம் அதாவது internet சேவை முற்றிலும் நின்றுவிடும். ஆக மொத்தத்தில் நமக்குத் தெரிந்த உலகம் முற்றிலும் மாறுபட்டு உலகமெங்கும் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகள் கூட பூர்த்தி செய்யப்படாத நிலைக்கு வந்து விடும்.

மூன்றாவது மாதத்தில் சந்திரன் பூமிக்கும் மிகவும் அருகே வந்துவிடும். குறிப்பாக நமது பூமியைச் சுற்றி வரும் செயற்கைக்கோள்கள் (satellite) தமது செயல்பாடு இழந்து பூமியை விட்டு விலகிவிடுவன. அதைத் தொடர்ந்து நான்காம் மற்றும் ஐந்தாம் மாதங்களில் காணப்படும் கடலலையின் உயரம் சுமார் 30 – 100 மீட்டரைத் தொட்டுவிடும். இது எல்லாமே போதாது என்று பூமியில் இது வரை காணாத நிலநடுக்கங்கள் ஏற்படக்கூடும்.




ஆறாவது மற்றும் ஏழாவது மாதங்களில் சந்திரன் சுமார் 50.000 km தூரத்தில் மட்டுமே காணப்படும். இந்த நிலையில் புவியின் ஒரு பகுதி கடல் நீரினால் மூழ்கியும் மறு பகுதி கடல் நீர் இல்லாமல் காணப்படும். 8–11 மாதங்களில் அதாவது சந்திரன் பூமியில் வந்து விழப்போகும் கடைசி மாதங்களில் பூமியின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருக்கும். பயங்கரமான நிலநடுக்கங்கள் மட்டுமில்லாமல் மாபெரும் எரிமலை வெடிப்புகளைக் காணமுடியும். இதன் விளைவாக ஏற்படும் தூசி கலந்த புகை புவியெங்கும் பரவி, சூரிய ஒளி பூமியை வந்தடைவதைக் கடினமாக்கும். அதனால் பூமியின் வெப்பநிலை கீழ்நோக்கிச் செல்லும். இதனால் பெரும்பாலான மனிதர்களும் விலங்குகளும் அழிந்துவிடுவன.



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

சரி அப்படியே இறுதிச் சுற்றுக்கு வருவோம். 12 ஆவது மாதம். அதாவது சந்திரன் பூமியில் வந்து விழும் அந்த மாதத்தைப் பார்ப்போம். இப்போது சந்திரன் வெறும் 10.000 km தூரத்தில் தான் இருக்கும். இந்நிலையில் உருண்டை வடிவில் நமக்கு நன்றாகத் தெரிந்த சந்திரன் வெடித்து லட்சக்கணக்கான கற்களாகப் பூமியைச் சுற்றி வரும். இதைத் தொடர்ந்து என்ன நடக்கும் என்று யாராலும் கணிக்க முடியாது. சுற்றி வரும் கற்களில் சில பூமியில் வந்து விழக்கூடும். அப்படி இல்லையென்றால் பூமியைச் சுற்றி வரும் கற்கள் சூரிய ஒளியை முற்றிலும் மறைத்து பூமியில் ஒரு பனியுகத்தை ஏற்படுத்தக்கூடும். அவ்வளவு தான், இத்துடன் நமது கதை முடிந்துவிடும்.

ஆக மொத்தத்தில் சந்திரன் எங்கே இருக்கிறதோ அங்கே அப்படியே இருந்தால் எங்கள் எல்லோருக்கும் நல்லது என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை. எதிர்காலத்திலும் இதில் ஒரு மாற்றமும் வரக்கூடாது என்று நம்புவோம்



நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2021 ஆண்டுக்கான புத்தம் புது டிசைன்கள், கலைநயம் மிளிரும் தரமான தங்க நகைகள் எம் கையிருப்பில்.



திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.

பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# கம் காமாட்சி அம்பாள் ஆலயமும், கலாச்சார மண்டபமும் தமிழர்களின் அடையாளமாகலாம்!



நவநிதி

படங்கள்: நந்தபாலன் ஆன்மிகத் தென்றல் வெற்றிமணி

யேர்மனியில் தமிழ்மக்களின் மிகப்பெரும் அடையாளமாக கம் காமாட்சி அம்பாள் ஆலயம் திகழ்கின்றது.

இன்று ஆலயம் அருகே பல இலட்சம் யூரோக்கள் செலவில் அமைக்கப்பட்ட கலாச்சார மண்டபம் மேலும் தமிழ் மக்கள் அடையாளத்தை வலுப்படுத்த உள்ளது எனலாம்.

ஆலய குரு பக்குவத்திருமணி சிவஸ்ரீ.பாஸ்கரக்குருக்கள் மக்களளதும் யேர்மனி கம் நகர அரசின் உயர் அதிகாரிகளதும் பெரும் ஆதரவுடனும் ஆலோசனைகளுடனும் இக்கைங்கரியத்தை சிறப்பாக செய்துமுடித்தார்.

கடந்த 06.02.2022 ஞாயிற்றுக் கிழமை அம்பாள் 12 மணியளவில் திருவீதி வலம் வந்து மண்டப வாயிலில் கதவு திறப்பதற்காக காத்திருக்கொதிரு சி.சக்திவேல் அவர்கள் திருமறைக் காட்டில் திருநாவுக்கரசர் கதவு திறக்க பாடிய திருப்பதிகமான

22 ஆம் பக்கம் பார்க்க...



21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## கம் காமாட்சி அம்பாள் ஆலயமும் கலாச்சார....



யுடனும் வரவேற்பு நடனத்துடனும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. ஆலய குரு மண்டபம் சிறப்பாக அமையவும் தனது 15 வருட கனவு நிறைவு பெறவும் பின்னின்று உதவிய சிலரை மேடையில் அறிமுகம் செய்து வைத்தார்.

சகநாயகன் சக்திவேல் திருசெல்வராஜாதிரு. ரமேஷ் அவர்கள் இடையிடையே நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினர்.

கலாச்சார மண்டபத்தில் வெற்றிமணி ஆசிரியர் திரு.மு.க.சு சிவகுமாரன் வாழ்த்துரை போலன்றி மகிழ்வுரையாக புதிய மண்டபத்தில் முதலுரை தந்தார். நாம் எல்லோரும் மனதில் ஒரு இலக்கை அடையவே பாடு படுவோம். ஆனால் அந்த இலக்கை எல்லோரும் அடைவதில்லை.





ஒரு சிலரே அடைகின்றனர். இங்கே சிவஸ்ரீ பாஸ்கரக்குருக்கள் தனது இலக்கை அடைகிறார் என்றால் அது அவருக்கு துணையாக திருவருளும் துணைநிற்கிறது என்பதே உண்மையாகும். பலர் கூடிச் செய்தாலும்மற்றவர்களுக்காக காத்திராது மேடை ஒழுங்குகளை தானே முன்னின்று செய்வதையும் ஒரு மேசை சுமப்பது என்றாலும் ஒருபக்கம் அவர் நின்று சுமப்பதையும் இங்கே கண்டேன். பலர் இப்படியான விழாக்களில் பிறர் எடுத்து வைப்பர் இது எனது பணியல்ல என இருப்பதை நான் கண்டு இருக்கிறேன். இவரது வெற்றிக்கு காரணம் மற்றவர்கள்தான் செய்யவேண்டும் என்று எதற்கும் எதிர்பாராத தன்மையே என்றார்.

மண்டபத்தில் சமையல் அறை ஒப்பனை அறைகள் நூலகம் விருந்து மண்டபம் என பலதும் திட்டமிடப்பட்டு மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டு இருக்கிறது.இன மத பேதம் இன்றி யாவரும் இந்த மண்டபத்தை பயன்படுத்த முடியும்.

அதற்கான பொது விதிமுறைகளை ஆலய நிர்வாகத்திடம் பெற்றுக்கொள்ளலாம்.இந்த கலாச்சார மண்டபம் தமிழர்களின் அடையாளம். அதனை மகிழ்வுடன் காப்பது தமிழர்களின் கடமையாகும்.

**''பண்ணின் நேர் மொழியாள் உமை பங்கரோ**
**மண்ணினார் வலம் செய்ம் மறைக்காடரோ**
**கண்ணினால் உமைக் காணக் கதவினைத்**
**திண்ணமாகத் திறந்து அருள் செய்ம்மினே''**

என்று..... மெய் உருகிப் பாடிமுடிக்கொ கதவினை ஆலய குருவினால் திறக்கப்பட சம்பிரதாய முறைப்படி நாடா வெட்டி மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. கம் நகர அரச அதிகாரிகளும் ஆலய குருவும் மக்கள் சார்பாக அங்கு நின்ற ஒருவரும் இணைந்து திறந்து வைத்தனர். மங்கல வாத்திய இசை முழங்க அம்பாள் மண்டப மேடையில் வீற்று இருக்கொ மங்கல இசை




07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## 'சூப்பர் மாம்' எனும் கைவிலங்கு




செய்யக் கூடியவள். எப்போதும் வேலை செய்து கொண்டு அழுக்கு நைட்டி உச்சிக்கொண்டை என வியர்வை நாற்றத்தோடு எஞ்சியதை உண்டு வாழக் கூடியவளாக குழந்தையின் மனதில் பதிகிறது இன்றும் அநேக இல்லங்களில். இது மாறவேண்டும்.

இந்த மாற்றம் நிகழ பெண்கள் மட்டுமே குழந்தை வளர்ப்பில் வீட்டு பராமரிப்பில் காலந்தோறும் உழன்று கொண்டிருக்க வேண்டும் என்கிற பார்வை மாறவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக 'உனக்கு என்ன தெரியும் ?' 'என்னதான் செய்கிறாயோ இவ்வளவு நேரமா ?' வீட்டில் தானே இருக்கிறாய் அப்படியென்ன வேலை ? ' போன்ற உச்சகட்ட எரிச்சல் வார்த்தைகளை கணவர்கள் கேட்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.








# பதில் நீ தான் சொல்ல வேண்டும்



கவிதா லட்சுமி
(நோர்வே)

என்னைப் பிடித்துபோனதாக
சொல்லி
என் கண்களிலும்
கனவுகளைக் கொய்து போட்ட
காதலனே..

முதலில் யாசிப்பதை
நிறுத்து
என் அடிமையென்று உளருவதை
நிறுத்து

எனக்கு அடிமைகளில்
பிடிப்பில்லை
அடிமைகளை நான்
காதலிப்பதில்லை

நிமிர்ந்து நில்
என் வாழ்க்கைதுணையாகப்
போகிறவனாய்

எனது வழியெங்கும்
காதல் வினாக்களை
வீசீ எறிகிறாய்
என்னை நோக்கி

உனது கேள்விகளுக்கு
பதில் சொல்ல வேண்டியது
நானல்ல
நீ தான்!

நான் நடந்தால்
பூவாசம் என்று சொன்னாய்
அதானால் கேட்கிறேன்
எனக்கு வியர்திருக்கையில்
நீ பார்திருக்கிறாயா?

என் பருவத்தின்
உடல் சுகமென்றாய்
காலத்தின் மாற்றத்தால்
என் சுருக்கம் இழைந்த
முகத்தை உன் கைகளில்
எந்திக் கொள்ள நீ

தயாரா
முகப்பூச்சம் கண்மையும்
இல்லாத பெண்ணாய்
பார்த்திருக்கிறாயா
என்னை

என் சிரிப்பை
ஒளிந்த நின்று இரசிப்பவனே
என் சினம் பொங்கும்
பொழுதுகளை தரிசித்திருககிறாயா?

மணிகணக்கில் காத்திருக்கிறாய்
என் வீதிகளில்

தேவதை என்கிறாய்
தென்றல் என்கிறாய்
மலர் என்கிறாய்
மது என்கிறாய்

உணர்வுகளின் உச்சத்தில்
நீ உளருவதில்
நானும் உருகிவரலாம்
உன்னோடு

இப்பொழுது நான்
கங்கைதான்
நீ நீந்தலாம் என்னோடு

காலப்போகில்
வற்றிவிடும் நதியாக
சுடு மணலில்
நீ நடக்க வேண்டி வரலாம்..

உன் கால்களில் தொப்பளங்களும்
மனதில் ரணங்களும்
வரலாம்


நீ தான்
சொல்ல வேண்டும்
பதில்.

கருகுமணி:02

# பறவைகளின் அறிவு



பறவைகள் விலங்குகள் பயிற்சியினால் பல வியப்பான செயற்பாடுகள் புரிவதை நாம் அறிந்துள்ளோம். அப்படிப் பயிற்சி இல்லாமலேயே பறவைகள் தங்களுடைய அன்பினைத் தெரிவித்த ஓர் அற்புத நிகழ்வு இன்றைக்கு 20 நூற்றாண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றது. அந்த நிகழ்வினைத் தன் சொற்களாலே அகநானூறு 208ஆம் பாடலிலே காட்சிப்படுத்தியுள்ளார் பரணர் என்னும் புலவர். ஆய் எயினன் என்னும் மன்னன் பறவைகளுக்குப் பாது காவலனாக விளங்கினான் என்பதைச் சங்கப் பாடல்களால் அறிகிறோம். இம்மன்னன் மிஞிலி என்னும் மன்னனுடன் போரிட்ட பொழுது வாட்போரிலே படுகாயமுற்றுக் களத்திலே வீழ்ந்தான். நடுப் பகலிலே நடைபெற்ற போராகையால் எரிக்கும் வெய்யிலிலே களத்தில் வீழ்ந்து கிடந்தான். அப்பொழுது பறவைகள் பல ஒன்றுகூடி வானிலே வட்டமிட்டு எயினனுடைய உடலுக்கு நிழல் வழங்கித் தம் அன்பினை வெளிப்படுத்தின. பரணர் அதனைப் பின்வருமாறு கூறுகிறார்:



பேராசிரியர்
அ.சண்முகதாஸ்
(வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாண
பல்கலைக்கழகம்)

''புள் ஒருங்கு
அங்கண் விசும்பின்
விளங்கு ஞாயிற்று
ஒண்கதிர் தெறாமை
சிறகரிற் கோலி
நிழல்செய்து உழறல்''

அழகிய இடத்தையுடைய வானத்திலே விளங்கும் பகலவனது ஒளியுடைய கதிர்கள் அவன் உடலைச் சுட்டு வருத்தாமல் இருப்பதற்காகப் பறவைகள் எல்லாம் ஒன்றாகக் கூடித் தம் சிறகுகளால் பந்தல் இட்டு நிழல் செய்து காத்தன. இவ்வாறான ஒரு செயற்பாட்டுக்குப் பயிற்சி பெறாமலே இப்பறவைகள் இயங்கின.

பயிற்சி பெற்று ஓர் அரிய செயலினைப் பறவைகள் ஆற்றியது பற்றி அகநானூறு 78 ஆம் பாடல் கூறுகிறது.

28 ஆம் பக்கம் பார்க்க...

‘சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்”



aaDaa Finance
0798000100

Aadaa Finance GmbH
Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)
Eidgenössische finanzmarktaufsicht Nr.35302
Fachmann Für Versicherung & Vorsorge
Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland
079 8000 100 | arulnages@yahoo.com



finma : 34598
cicero : 25605



சர்வதேச மகளிர் தினமும்
# புலம் பெயர் நாடுகளில் நமது பெண்களும்!

சர்வதேச மகளிர் தினம் என்பது பெண்களின் சமூகொ பொருளாதாரொ கலாச்சார மற்றும் அரசியல் சாதனைகளைக் கொண்டாடும் உலகளாவிய தினமாகும். பாலின சமத்துவத்தை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைக்கான அழைப்பையும் இந்த நாள் குறிக்கிறது.

எந்த ஒரு சமூகத்திலும் பெண்களின் முன்னேற்றம் பல தளங்களிலும் ஏற்றம் அடைகின்ற போது அச் சமூகமும் பல வழிகளில் முன்னேறுகின்ற தன்மையை நாம் பல நாடுகளில் பார்க்கிறோம். இந்த சிறு கட்டுரை மூலம் சர்வதேச மகளிர் தினம் குறித்து ஒரு சில முக்கியமான விடயங்களை மட்டும் கவனத்திற் கொண்டு இவ்வேளையில் தமது உரிமைகளை பெற்றுக் கொள்வதில் அல்லது தக்க வைத்துக் கொள்வதில் எமது பெண்களுக்கான சவால்களையும் அவர்கள் எடுக்கக் கூடிய நடவடிக்கைகளையும் பார்ப்போம்.

சர்வதேச மகளிர் தினத்தின் தோற்றமும் வரலாறும் பின்வருமாறு திகதிப்படுத்தப்படுகிறது. சர்வதேச மகளிர் தினம் (IWD) 1900 களின் முற்பகுதியில் இருந்து கொண்டாடப்பட்டு வருகிறது. 1908 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் சோசலிஸ்ட் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 15000 பெண்கள் குழு நியூயார்க் நகரத்திற்கு அணிவகுத்து சிறந்த வேலை நேரம் ஊதியம் மற்றும் வாக்களிக்கும் உரிமை ஆகியவற்றைக் கோரியது.

Foto: Group of striking women-shirtwaist workers in New York City, circa 1909.

On November 23, 1909, more than 20,000 Yiddish-speaking immigrants, mostly young women in their teens and early twenties, launched an eleven-week general strike in New York's shirtwaist industry. Dubbed the Uprising of the 20,000, it was the largest strike by women to date in American history.

ஒரு வருடம் கழித்து 1909 இல் குழு முதல் தேசிய மகளிர் தினத்தை அறிவித்தது. சர்வதேச அளவில் முறையான அங்கீகாரம் 1910 இல் தொடங்கியது டென்மார்க்கில் உழைக்கும் பெண்களுக்கான சர்வதேச மாநாட்டில் க்ளாரா ஜெட்கின் என்ற பெண்மணி ஒரு சிறப்பு நாள் அங்கீகாரத்தை பரிந்துரைத்தார்.

இப்படியான முன்னெடுப்புக்களினால் உலகளாவிய ரீதியில் நாம் பெரும் முன்னேற்றம் அடைந்திருந்தாலும் பாலின சமத்துவமின்மை என்கின்ற பிரச்சினை இன்னும் நீடிக்கத்தான் செய்கிறது குறிப்பாக எமது புலம் பெயர் தேசங்களில் எமது பெண்களுக்கான உரிமைகள் பேணப்படுகின்றனவா அல்லது அது குறித்து பாலின பாகுபாட்டால் பாதிக்கப்பட்ட பெண்களே அதை உணருகிறார்களா என்று அவதானித்தால் அது கவலைக்கிடமாகவே இருக்கிறது.



**பூங்கோதை**
**(இங்கிலாந்து)**

இனிகீழே தரப்பட்டுள்ள புள்ளி விவரங்களில் சிலவற்றைப் பாருங்கள் (https://www.bbc.co.uk/ news/ world - 48623037). ஆண் மற்றும் பெண் சகாக்களிடையே இன்னும் வேறுபாடுகள் இருப்பதை நீங்கள் காண்பீர்கள்:

★42% பெண்கள் வேலையில் பாலின பாகுபாட்டினால் அவதியுறுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

★பணியிடத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பல முக்கிய தடைகளில் பாதிக்கு மேற்பட்டவை பாலின பாகுபாடு மற்றும் பாலின சார்பு தொடர்பானவை.

★ஒரு நிறுவனத்தில் 90% மூத்த தலைவர்கள் ஆண்களாக இருக்கும் போது தங்கள் நிறுவனத்தில் பெண்கள் நன்கு பிரதிநிதித்துவம் பெறுவதாக பாதி ஆண்கள் நம்புகிறார்கள்.

மேற்கூறப்பட்ட தரவின் படி பரந்து பட்ட ரீதியில் பெண்களின் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் பாலின ரீதியில் பாரபட்சம் அதிகமாக இருப்பது ஆய்வுகளில் தெரிய வந்தாலும்புலம் பெயர் பெண்களின் வாழ்வில் இது ஒரு படி கூடுதலாகவே உள்ளதற்கு எமது சமூகத்தின் கட்டுமானமும் அதன் எதிர்பார்ப்புகளும் பெண்கள் தமக்காக நடைமுறையில் இருக்கும் பல சேவைகளைப் புரிந்து கொண்டு அவற்றை பாவிக்காத தன்மையும் அதற்கான விழிப்புணர்வு இல்லாமையும் முக்கிய காரணங்கள் எனலாம்.




நம்மைச் சுற்றியுள்ள சிக்கலான உலகத்தைப் புரிந்துகொள்வதற்காகொ நாம் சந்திக்கும் விஷயங்களை எப்படி எதிர்கொள்வது எனச்சிந்திக்கவும் அலசி ஆராய்வதற்கும் சரியான தீர்மானங்களை எடுப்பதற்கும் அநேகமான நமது பெண்களுக்கு மொழியும் ஒரு தடைக்கல்லாக இருப்பது கண்கூடு. புலம் பெயர் தேசங்களில் வசிக்கும் எமது பெண்களுக்கு அவர்கள் வாழுகின்ற நாடுகளில் இருக்கின்ற பல குடும்பொ சமூகொ அரசியல் நலத்திட்டங்களை அறிந்து அவற்றை தகுந்த முறையில் பாவிக்கின்ற தன்மை இல்லாது இருத்தல் அவர்கள் தம் உரிமைகளை வென்றெடுக்க ஒரு தடைக்கல்லாகவும் ஒரு பாரிய பின்னடைவாகவும் உள்ளது.


தகவல்களை அறிந்து கொள்வது என்பது ஒரு செல்வம் (Information is wealth) எனக்கருதி பெண்கள் அனைவரும் தமது குடும்பம் குழந்தைகள் தம்மைச்சுற்றியுள்ள சமூகத்தின் தேவைகளை அறிந்து கொள்வது அதிலும் முக்கிய மாக வீட்டு வன்முறைகள் சார்ந்த தகவல்கள் அதற்கான பாதிப்பு இருக்கும் பட்சத்தில் அதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அது குறித்த விழிப்புணர்வை வளர்த்துக் கொள்வது என்பன மிக அவசியம்.

தமக்கு தேவையானது எதுவென்று அறியக்கூடிய வரையிலாவது பெண்கள் இருக்க வேண்டும். குடும்பப் பொறுப்புகளை சுமப்பது மட்டுமே அக்குடும்பத்தை அவர்கள் வாழும் சமூகத்தை முன் நோக்கி எடுத்துச் செல்லாது. பெண்கள் தமது குழந்தைகளுக்கும் தம்மை சுற்றி உள்ளவர்களுக்கும் முன்மாதிரியாகத் திகழக் கூடிய வல்லமை கொண்டவர்கள். தமது வாழ்வில் பல சவால்களை முறியடித்து வெற்றி பெற்ற பல பெண்கள் உலகளாவிய ரீதியிலும் புலத்திலும் புலம் பெயர் தேசங்களிலும் இருக்கிறார்கள்.

பெண்களேபெண்களின் சாதனைகளைக் கொண்டாடுங்கள். பெண்கள் சமத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.



# குருதி அணல் வாதம் என்றால் என்ன?






நேர்காணல்: பைஷல் இஸ்மாயில் (இலங்கை)

# உடலில் வரவு,செலவுக் கணக்கு சரியாக இருக்கவேண்டும்! சேமிப்பு ஒருபோதும் கூடாது!!

இரத்தக்கொதிப்பை தமிழில் குருதி அணல்வாதமென்றும் ஆங்கிலத்தில் ஹைபெர்டென்சன் (Hypertension) என்று அழைக்கின்றனர். மேலும் இரத்தச்சூடு இரத்த அழுத்தம் இரத்த மிகுதி இரத்த அமுக்கம் இரத்தப் பெருக்கம் இரத்தாதிக்கம் நரம்பிறுக்கம் நாடி இறக்கம் போன்ற பெயர்களாளும் அழைக்கப்படும். அதாவது காரணம் கண்டுபிடிக்க முடியாத மிகையான இரத்தழுத்தம் என்பது இதன் பொருளாகும். உணர்ச்சிகள் கட்டுப்பாடற்று கொந்தளிப்பு அடையும்போது இரத்த ஓட்டம் தடைப்படும் நிலையில் மூளையின் சில பகுதிகளுக்கு பிராணவாயு சரியான முறையில் கிடைக்காமல் மூளையின் செயற்பாட்டு விசை நரம்புகள் செயல் இழக்கின்றன. இந்த உணர்ச்சி அலை மோதல் எல்லை கடக்கும் நிலையில் இரத்த அழுத்தம் ஏற்படுகிறது.

பொதுவாகொ இன்றைய அவசர குழப்பமயமான வாழ்க்கை முறையே இந்நோய் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது. இதனை இன்னுமொரு முறையில் கூறப்போனால்



வைத்தியர்
ஏ.சி.டில்சாட
DA (Col) ,
BAMS (India),
Panchakarma (Kerala)
மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை, நிந்தவூர், இலங்கை.

எமக்கு ஏற்படப்போகும் பாரிய நோயின் முன்னறிவித்தல் என்று கூடச் சொல்லலாம். இரத்த அழுத்தம் உடலில் அதிகரிக்கும்போது ஆரம்பத்தில் அதுபற்றி பெரும்பாலாநோருக்கு வெளியே தெரிவதில்லை.




**? இந்நோய் ஏற்படுவதற்கான காரணங்கள் எவை?**

உணர்ச்சிகள் அல்லது மனப்பளு மனக்கொந்தளிப்பினாலும் இதயம் இரத்தத்ததை வாயுவின் வேகத்தால் உந்தித்தள்ளும் வேகத்தின் இயல்பில் மாற்றம் ஏற்படும்போதும் ஏற்படுகின்றது.

நெடு நாட்கள் தொடரான மலச்சிக்கல் மதுபானை புகையிலை பாவனை மாப்பொருட்கள் கொழுப்பு இறைச்சி போன்றவற்றை அதிகமாக உண்பதனாலும் மிகுந்த உழைப்பு மனக்களிப்பு நாடியின் மிகுந்த துடிப்பு அதிக சிந்தனை காமம் மேக நோய்கள் தொண்டை நோய் பித்தப்பை நோய் ஈரல் மற்றும் நீர்பபை போன்றவற்றில் ஏற்படும் புண்கள் மனக்கவலை பயம் பதட்டம் காரணமான உறைப்புக்களை உண்ணுதல் நச்சுள்ள உணவுப் பொருட்களை உண்ணுதல் போன்ற காரணங்களால் இந்நோய் ஏற்படுகின்றது.

இந்நோய் இயல்பாகவே கூடவும் குறையவும் செய்யும். நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது இரத்த அழுத்தம் குறைவடைகின்றது. திடீரென ஏற்படும் மன எழுச்சி இரத்த அழுத்தத்தினை திடீரென உயர்த்துகின்றது. உடலியல் மற்றும் மனவியல் காரணங்கள் ஆகிய இரண்டு விதமான செய்கைகளே குருதி அணல்வாதத்திற்கு காரணிகளாக அமைகின்றன.

**? நீங்கள் குறிப்பிட்ட இரு காரணிகளையும் தெளிவுபடுத்த முடியுமா?**





ஆம் உடலியல் காரணி என்றால் – புகை பிடிப்பவர்களுக்கும் மதுபோதை போதை மருந்துகள் அருந்தும் பழக்க முடையவர்களுக்கும் இரத்த நாளங்கள் குறுகி விடுகின்றன. அதாவது இரத்த நாளங்கள் விரிந்து சுருங்கும் தன்மை சிறிது சிறிதாக குறையத் தொடங்குகின்றது. இதனால் இந்நோய் ஏற்பட ஏதுவாகிறது. மேலும் அதிகமாக மீன் இறைச்சி உண்பதினால் இரத்தத்தில் கொழுப்பு

26 ஆம் பக்கம் பார்க்க...



# குருதி அனல் வாதம் என்றால் என்ன?






25 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அதிகமாகி இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படிகின்றது. இதனாலும் இந்நோய் ஏற்பட ஏதுவாகிறது.

எந்த வித வேலைகளையும் செய்யாமல் உடற்பயிற்சியின்றி சோம்பேறித்தனமாய் இருப்பவர்களுக்கு உணவு அதிகமாகி உடல் எடை கூடுகின்றது இதனால் உடல் உழைப்புக் குறைந்து கொண்டே போவதால் உடலில் கொழுப்புப்படிவு அதிகமாகி நோயைத் தோற்றுவிக்கின்றது.

உடலைப் பொறுத்தமட்டில் வரவு செலவுக் கணக்கு சரியாக இருக்க வேண்டும். சேமிப்பு ஒருபோதும் இருக்கக்கூடாது. நாம் உண்ணும் உணவில் உப்பு சீனி கூடினாலும் இரத்தத்தின் கெட்டித்தன்மையை அதிகமாக்கி பாயும் தன்மையைக் குறைக்கின்றது. இரத்த ஓட்டத்தில் பலத்த மாறுபாடுகளை இவை உண்டாக்குவதால் அவற்றை அளவுடன் சேர்த்துக்கொள்வதே நல்லது.


மனவியல் காரணி என்றால் – கோபம் பகைமை வெறுப்பு வஞ்சம் போன்ற தீய குணங்கள் எமது நாளமில்லாச் சுரப்பிகளையும் தானியங்கி நரம்பு மண்டலத்தையும் தாக்குவதால் இரத்த அழுத்தம் கூடுகின்றது. ஆகவே தீய எண்ணங்கள் மற்றும் குணங்கள் எம்மை நோயாளிகளாக மாற்றுகின்றது. பயம் பதற்றம் கவலை போன்ற குணங்கள் எமது உடலின் இயக்கத்தில் பல மாற்றங்களைத் தோற்றுவித்து இரத்த அழுத்தத்தைக் கூட்டுகின்றன. சில சில நேரங்களில் கவலைப்படுவார்கள் சிலர் எப்போதும் கவலைப்படுபவதை பழக்கப்படுத்தி தொழிலாக வைத்துக் கொள்வார்கள். அவர்களில் சிலருக்கு இந்நோயின் வாய்ப்பு அதிகமாகின்றது.

உணர்ச்சிகளினால் ஏற்படும் மனப்போராட்டம் மற்றும் தொடராக இருக்கும் மனப்போராட்டம் போன்றன நரம்பு மண்டலத்தை தாக்கும்போது கூடுதல் இரத்த அழுத்தம் உருவாகிறது. சிலருக்கு பொருளாதாரப் பிரச்சினைகள் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைகள் தோன்றும்போது வாழ்க்கை துன்பகரமாகத் தோன்றி மனப்பளு தோன்றுகிறது. மனப்பளுவும் இந்நோய்க்கு மூல காரணமாகின்றது.

பெண்கள் கருவுற்ற காலங்களில் உடலில் நச்சுநிலை கூடுவதால் இரத்த அழுத்தம் கூடுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. நாளமில்லா சுரப்பிகளின் இயக்கம் மாறுபடுவதால் இரத்த அழுத்த நோய் உண்டாகிறது. உதாரணமாகொ கணையம் வேலை செய்யாதபோது நீரிழிவுநோய் உண்டாகிறது. அந்த நீரிழிவு நோயினால் இரத்த அழுத்த நோய் உண்டாகும் வாய்ப்பும் அதிகரிக்கின்றது.

இரத்த அழுத்த நோய் வந்தவர்களுக்கு சிறுநீரக் கோளாறுகள் உண்டாவதற்கும் வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. அதாவது சிறுநீரகம் இரத்தத்தில் அதிகளவில் உள்ள உப்புச்சத்தை சிறுநீர் மூலம் வெளிப்படுத்துகின்றது. சிறுநீரம் பழுதடையும்போது இரத்தத்தில் உப்புச்சத்து கூடுகிறது. உப்புச்சத்து கூடும்போது இரத்த ஓட்டத்தில் பலத்த மாறுபாடுகளை உருவாக்குகிறது. சரியான ஊட்டச்சத்து உட்கொள்ளாமை உழைப்புக் குறைவான சோம்பேறி வாழ்க்கை தொழிற்சாலைகள் ரயில் மற்றும் பஸ் நிலையங்கள் குவாரி போன்ற இடங்களில் கேட்டும் பேறிரைச்சல் காரணமாக அமைதியான நிதானமான வாழ்க்கையை கழிக்க முடியாமல் அன்றாடம் எந்த நேரமும் பரபரப்புடன் இயங்க வேண்டிய நிர்ப்பந்த நிலை பல்வேறு காரணங்களால் வாழ்க்கையில் போராடியாக வேண்டிய சங்கடம் தவிர்க்க முடியாத நிலையில் ஏற்படும் கோபத்தால் உண்டாகும் ஆபேச உணர்வுகள் கவலை ஏமாற்றம் காரணமாக மனதில் ஏற்படும் அதிர்ச்சிகள் போன்ற காரணிகளும் உயர் இரத்த அழுத்த நோய்க்கு காரணமாக அமைகின்றன.





## ? இந்நோயின் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் என்ன?

நாடி நரம்பும்புகளில் இரத்தக் குழாய்கள் முறுக்கேறி இயற்கையாக ஓடிக்கொண்டிருக்கும் இரத்த வேகம் குன்றி சிறு குழாய்களில் இரத்தம் கசிந்து விடும். அதனால் மயக்கம் தலைச்சுற்றுகை மற்றும் கால் சோர்வு ஞாபக மறதி போன்ற அறிகுறிகளை வெளிப்படுத்தி முளையில் இரத்தக் கசிவை ஏற்படுத்திவிடும். அதனால் திடீரென பேச்சும் ஞாபக மறதியும் ஏற்பட்டு படுக்கையில் வீழ்த்திவிடும் ஒரு நோயாக இருக்கிறது.

மூளையின் பகுதிகளில் கை கால் வாய் முகம் போன்ற பாகங்கள் தொடர்பு பட்டுள்ளதால் அது செயலிழந்துபோய் விடுகின்றன. இதை தமிழில் பாரிசவாதம் என்றும் ஆங்கிலத்தில் Paralysis என்றும் கூறுகின்றனர்.

## ? இந்நோயிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக்கொள்ள நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?

இரத்த அழுத்தநிலை சீராக இருக்கும்வரை உடல்நலம் சீராக இருக்கின்றது. இரத்தவேகம் குறைந்தாலோ அல்லது கூடினாலோ இரத்த அழுத்த நோய் உருவாகிவிட்டது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். கூடியவரை இரத்த அழுத்த நோய் வராமல் தவிர்ந்து கொள்ளுதல் வேண்டும். வந்தால் மருத்துவ சிகிச்சை மூலம் முற்றிலும் குணப்படுத்திக்கொள்வது சாத்தியமில்லை என்று கூறினாலும் மனவியல் உடலியல் தொடர்பான சில நடைமுறைகளை கையாள்வதினாலும் இயற்கையுடன் ஒத்து நடப்பதன் மூலமும் இரத்த அழுத்த நோயினை ஒரு கட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

குறிப்பாகொ உடலியல் மற்றும் மனவியல் ரீதியாக கவலையற்று மன மகிழ்வுடன் வாழும் வாழ்க்கையை நடாத்திச் செல்லுதல்எந்தக் காரியத்தையும் அவசரமின்றி நிதானமாக செய்வதற்கு கற்றுக்கொள்ளல் நேரம் கிடைக்கும்போ தேல்லாம் ஓய்வு எடுத்தல் உடற்பயிற்சியை தினமும் செய்தல் அளவான உணவை உட்கொள்ளல் போன்ற விடயங்களை கடைப்பிடிப்பதன் மூலமே நாம் இந்நோயிலிருந்து பாதுகாப்புப்பெற முடியும். ■






04 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## மீண்டும் அச்சுறுத்தும் வெள்ளை வான்கள்



எது எப்படியிருந்தாலும், ஊடகவியலாளர்களுக்கு ஆபத்தான நாடாகத்தான் இலங்கை தொடர்ந்தும் உள்ளது என்பதை இந்தச் சம்பவம் மீண்டும் உணர்த்தியிருக்கின்றது.

இலங்கையில் ஊடகவியலாளர்கள் இலக்கு வைக்கப்படுவது இது முதல் முறையல்ல. ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும் உள்ள வரலாறு இலங்கைக்குள்ளது.

அவ்வாறு ஊடகவியலாளர்களுக்கு எதிராகச் செயற்பட்ட யாருமே இதுவரையில் சட்டத்தின் முன்பாக நிறுத்தப்படவில்லை. குற்றவாளிகள் சுதந்திரமாகத் திரிகின்றார்கள். தண்டனைகளிலிருந்து அவர்கள் எப்போதும் விலக்களிக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றார்கள்.

தற்போது சமுத்ர சமரவிக்கிரம இல்லத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னர் சி.சி.ரி.வி. கமரா பதிவுகள், கைரேகை அடையாளங்கள் என பல ஆதாரங்கள் சிக்கியுள்ளன. சூத்திரதாரிகள் கைதாவார்கள் அல்லது சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கக்கூடிய நிலை இலங்கையில் இல்லை. கடந்த கால சரித்திரம் உணர்த்துவது அதனைத்தான்.

ஊடகவியலாளர் இல்லம் தாக்கப்பட்டு நான்கு தினங்களிலேயே கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணிச் செயலாளர் நிசாந்தன் என்பவரைக் கடத்துவதற்கான முயற்சி ஒன்று இடம்பெற்றிருக்கின்றது. தம்மை அரச புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனக்கூறிக்கொண்டு வெள்ளை வானில் வந்த சிலர் நிசாந்தனை வியாழக்கிழமை இரவு வீதியில் வைத்து கடத்திச் செல்வதற்கு முற்பட்டிருக்கின்றார்கள். நண்பர்கள் உதவியுடன் அவர் ஓடித்தப்பியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அந்த வேளையில் எடுக்கப்பட்ட புகைப்படத்தை கூட்டமைப்பின் மட்டக்களப்பு எம்.பி. சாணக்கியன் தனது ரூவிட்டர் பக்கத்தில் வெளியிட்டிருக்கின்றார். அதன் இலக்கமும் படத்தில் தெளிவாகத் தெரிகின்றது. அதனால், சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பதை கண்டறிவது இலகுவானது. பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் எனக் கோரும் கையெழுத்துப் போராட்டம் ஒன்றை தமிழரசுக் கட்சியின் இளைஞரணி முன்னெடுத்திருக்கின்றது. இந்தப் போராட்டத்தில் முன்னணியில் நின்று செயற்பட்டவர்களில் நிசாந்தன் முக்கியமானவர் என சாணக்கியன் தெரிவித்தார். இந்த கடத்தல் முயற்சிக்கும் அது காரணமாக இருக்கலாம்.

எது எப்படியிருந்தாலும் அரசியல் எதிராளிகளையும்இ அரசை அம்பலப்படுத்தும் ஊடகவியலாளாகளையும் அடக்குவதற்கு வெள்ளை வான்கள் மீண்டும் களத்தில் இறக்கப்பட்டிருப்பதைத்தான் இந்த இரண்டு சம்பவங்களும் உறுதிப்படுத்துகின்றன.

கடந்த காலங்களில் வெள்ளை வான்கள் மூலம் பல நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். ஆனால், ஆதாரங்கள் சாட்சியங்கள் இருந்தும் இன்றுவரையில் யாருமே நீதியின் முன்பாக நிறுத்தப்படவில்லை. சட்டத்திலிருந்து அவர்களால் எவ்வாறு தப்பித்துக்கொள்ள முடிகின்றது என்பதும் இரகசியமானதல்ல.

ஆக, இப்போது வெள்ளை வான்கள் மீண்டும் களத்தில் இறக்கப்பட்டிருப்பது வெளிப்படையான ஒரு எச்சரிக்கைதான். கருத்துச் சுதந்திரம், ஜனநாயகம் என்பவற்றுக்கான ஒரு கடுமையான அச்சுறுத்தல்தான்.

அதுவும் ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகவிருக்கும் நிலையில், ஒரு ஆபத்தான நிலை உருவாகி வருவதைத்தான் இந்தச் சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன. ஜெனிவாவில் இவை எதிரொலிப்பதையும் தடுக்கமுடியாதிருக்கும்.

18 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## தற்காக்கும் சகிப்புத்தன்மையின்...



தாய் தன் குழந்தை அடிக்கடி தொந்தரவு செய்தாலும் அன்போடு ஏற்றுக் கொண்டு சேவை செய்வதைப்போலொ அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலொ தன்னை சிலுவையில் அறைந்தவர்களையே மன்னிக்கும்படி பிரார்த்தனை செய்த இயேசுவைப் போலொ சிறைச்சாலையில் தன் நெஞ்சில் தினம் உதைத்த காவலனுக்கு அந்த வடுவின் அடையாளம் எடுத்து அழகிய பாதணி தன் கையால் தைத்து கொடுத்த காந்தியடிகள் போல. இப்படி வீட்டில் உள்ளவர்கள் முதல் நாட்டின் தலைமைகள் வரை உதாரணங்கள் பல கூற முடியும். இதனால் பெறுமதியான எதையும் இழப்பதற்கு இல்லை. ஆணவம் அகங்காரம் மமதை போன்ற தீய விடயங்களே இழக்கப்படுவதால் அத்தகைய மனிதனாலேயே முழுமை பெறமுடியும். இதுவே அகச்சுத்தம். இங்கு அன்பு இயல்பாகவே குடிகொண்டிருக்கும்.

கிடைத்திருக்கும் வாழ்வையும் எம் சூழலையும் சகித்துக் கொண்டால் அந்த சூழலை மேலும் அழகாக்கிவிட வாய்ப்புக்கள் அமையும். ஏற்றுக்கொள்ளாவிடத்து அந்தச் சூழலோடு உடல் மன அகச் சூழலும் பாதிப்புக்குள்ளாகும். எதுவாயினும் கடந்து விடும். எனவே எந்த விடயத்தாலும் காயப்படுத்த முடியாத சுதந்திர காற்றைப் போல் திகழ வேண்டும். இந்தக் கணம் மட்டுமே உண்மை மற்றவை எல்லாம் நினைவுகளும் கற்பனைகளுமே. நாம் வாழ்வதற்கு சிரமப்படும் இந்த வாழ்க்கை பலருக்கு எட்டாக்கனியாகவும் கனவாகவும் இருக்கிறது. வாழ்க்கை என்பதே சவால் தான். அது மனிதனுக்கு மட்டுமல்ல ஒவ்வொரு உயிரினங்களுக்கும் அவ்வாறே அமைந்துள்ளது. எல்லாம் எம்பக்கம் சாதகமாக இருக்க வேண்டுமென எதிர்பார்த்தால் அது எத்தனையோ உயிரிகளுக்கு பாதகமாகவும் இருக்கலாம்.

எனவே இயற்கை தன்னை சமநிலைப் படுத்துவதில்தான் கவனம் கொள்ளும். வருவது எதுவாயினும் அதை ஏற்றுக் கொள்வதால் இலகுவில் அதை கடந்துவிடலாம். இன்பமோ துன்பமோ பிடித்துவைக்க முடியாது. அடுத்த கணம் எமக்கானதாககூட மாறிவிடும் எவர் அறியக் கூடும்.


முக்கியமானது என்னவெனில் எவ்வாறு துன்பத்தை சகித்துக் கொள்கின்றோமோ அவ்வாறே இன்பத்திலும் சகிப்பு வேண்டும். இன்பத்தை கொண்டாடும் மனநிலையானது துன்பம் வரும்போதும் துவண்டுவிடும். எனவே சமநோக்கு பார்வையில் இருநிலையிலும் சலனமுறாமல் சகித்துக் கொண்டால் அதுவே அற்புதமான யோக நிலையாகும். அந்நிலையில் திருப்தி படுத்தவே முடியாத ஆவலும் நாவுக்கு சுவையும் மனதுக்கு ஆசையும் அகங்காரத்துக்கு தீனியும் தேடி அலைவது நின்றுபோய் அர்த்தமுள்ள வாழ்வானது அகத்தேயும் புறத்தேயும் அழகாக மலரும்.




08 ஆம் பக்கத் தொடர்ச்சி....

## ஆச்சி அஃறினையா உயர்தினையா!

நிலமை சரியில்லை எண்டு திருப்பியும் சொல்ல ஊரில சாத்திரீயாரிட்டை ஆச்சீன்டை குறிப்போட போச்சினம். அதோட அம்மாவின்டை குறிப்போட போன அக்காவும் மற்ற ஆச்சீன்டை பிள்ளைகளும் சாத்திரி குடுத்த நம்பிக்கையில ரெண்டு கிழமை ரிக்கற்றை பின்னுக்குப் போட்டிச்சினம்.



ஏழாம் கட்டில் காரர் அதுக்குள்ள ஒரு பள்ளிக்கூட ஒன்று கூடல் கோயில் திருவிழா சாமத்திய வீடு day party எல்லாம் முடிச்சுப் போட்டு திருப்பி ஆஸ்பத்திரிக்கு வந்திச்சினம். இப்ப என்ன மாதிரி எண்டு கேட்டவைக்கு ஆச்சீன்டை நிலமையில மாற்றம் ஒண்டும் இல்லை வீட்டை கூட்டிக்கொண்டு போங்கோ எண்டு நேர்ஸ் சொன்னா. நாங்க எப்பிடி கொண்டே வைச்சுப் பாக்கிறது இங்கயே இருக்கட்டும் நிலமை மாறினா பாக்கிறம் எண்டு போனவையைப் பிறகு கண்டபடி காணக்கிடைக்கேல்லை.

Extend பண்ணின ரெண்டு கிழமை முடிய வந்தவை கொஞ்சம் காரசாரமாத் தொடங்கிச்சினம் நீங்கள் நிலமை சரியில்லை எண்டு எங்களை வரச்சொல்லீட்டு இப்ப என்னெண்டா எப்ப சீவன் போகும் எண்டு தெரியாது எண்டு சொல்லுறீங்கள் சாத்திரியாரும் பேக்காட்டிப் போட்டார் அவ்வுன்டை ஆயுள் ரேகை எப்பவோ முடிஞ்சு போட்டுது எண்டார் ஆனால் ஒண்டும் முடிஞ்ச பாடில்லை . எங்களுக்கு வேலை இருக்கு எத்தினை நாள் தான் நிக்கிறது ஒரு முடிவைச் சொன்னாத்தான் நாங்கள் plan பண்ணலாம் எண்டு சொல்லொ அவை என்ன பிளானை சொல்லினம் எண்டு நேர்ஸ் மார் யோசிக்கத் தொடங்கிச்சினம்.

இப்ப போட்டு திருப்பி செத்தவீடு அந்திரட்டி எண்டு திருப்பித் திருப்பி வரேலாது. ஐயர் சொன்னவர் ஏதும் நடந்தாலும் ரெண்டு கிழமையிலயே எல்லாம் செய்யலாம் எண்டு ஆச்சி உயிரோட இருக்கேக்கயே அஃறினை ஆக்கிச்சினம் . அதுக்கிடேல பக்கத்து எட்டாம் கட்டிலில இருந்தவின்டை மகள் வந்து ரிக்கற்றை வெட்டி விடுங்கோ நாங்கள் இனி வீட்டை கொண்டே வைச்சுப் பாக்கிறம் எண்டு வந்து கேட்டா. அம்மாவை மகள் கூட்டிக்கொண்டு போக ஆச்சியையும் நாங்கள் நிலமையைச்சொல்லி வீட்டை கொண்டே வைச்சு மூக்கால சாப்பாடு குடுக்கிறது எப்பிடி எண்டு விளங்கப்படுத்தி அனுப்பினம்.

ரெண்டு கிழமையால தையல் வெட்ட அம்மாவை மகள் கூட்டிக்கொண்டு வந்தா இப்ப பரவாயில்லை கொஞ்சம் பிடிச்சுக் கொண்டு நடக்கிறா எண்டு சந்தோசப்பட்டு சொல்லீட்டுப் போனா. Ward round முடிச்சிட்டுப் பேப்பரைப் பாத்தா பேப்பரின்டை முழுப்பக்கத்தை ஆச்சி ஆக்கிரமிச்சு இருந்தா இரங்கல் செய்திக்கு ஐஞ்சு நாட்டில இருந்து பத்துப்பேர் காசு குடுத்திருக்க வேணும் எல்லாரின்டை பேரும் நம்பரும் பெரிசா போட்டிருந்திச்சு. அஃறினை வாழ்ந்த ஆச்சி இப்ப மீண்டும் உயர்திணையா இருந்தா பேப்பரில.

23 ஆம் பக்கத் தொடர்ச்சி....

## பறவைகளின் அறிவு

சேரொ சோழொ பாண்டிய மன்னர்களின் படைகள் பாரி மன்னனுடைய பறம்புக் கோட்டையினை முற்றாகச் சூழ்ந்து நின்றன.பாரியின் நண்பரான புலவர் கபிலரும் கோட்டைக்குள்ளேயே இருந்தார்.இதனால் கோட்டைக்குள் உணவில்லா மல் இருந்தவர்களுக்குக் கிளிகளைப் பயிற்றி நெற்கதிர் கொண்டுவரச்செய்து கபிலர் பசி நீக்கினார். அதனைப் புலவர் மதுரை நக்கீரனார் பின்வருமாறு கூறுகிறார்:

**''உலகுடன் திரிதரு பலர்புகழ்**
**நல்லிசை வாய்மொழிக்**
**கபிலன் சூழச் சேய்நின்று**
**செழுஞ்செய்ந் நெல்லின்**
**வினைகதிர் கொண்டு**
**தடந்தாள் ஆம்பல்**
**மலரொடு கூட்டி''**

''உலகெங்கும் சுற்றிக்கொண்டிருக்கும் பலரும் புகழ்கின்ற நல்ல பெருமை பெற்ற வாய்மை தவறாத மொழியினை உடைய கபிலன் ஆராய்ந்து செயற்பாட்டினை மேற்கொள்ளொ நெடுந் தொலைவினின்று வளம்பொருந்திய வயல்களிலே விளைந்த நெற்கதிர்களைக் கொண்டு வந்து அவற்றைப் பெரிய தண்டினையுடைய ஆம்பல் மலராகிய அவியலொடு கூட்டிச் சமைத்து உண்பித்து'' என்று கூறப்படுகிறது.

பறவைகளின் பகுத்தறிவையும் பயிற்றறிவையும் நன்கு கூர்ந்து கண்காணித்து நமக்கு சொல்லோவியங்களாகப் பண்டைத் தமிழ்ப் புலவர் தந்துள்ளனர்.

11 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## என்ன வைத்திருக்கிறோமோ அது நாகரிகம்...

மதத்தினராலேயே பெண்ணடிமை தலைதூக்கியது எனலாம். பெண் நேராக வீடுபேறு அடைய முடியாது. பெண் பிறவி இழிபிறவி என்றெல்லாம் வன்மத்தை ஏற்படுத்தினர். அதன் பின் வந்த வேத ஆரியர்கள் கூட ஆணுக்கு நிகராகப் பெண்ணைப் போற்றிப் பார்க்கும் பக்குமற்றவர்களாகவே இருந்தார்கள். பெண்கள் இளமைக்காலத்தில் பெற்றோரையும் பின் கணவனையும் அதன் பின் பிள்ளைகளையும் சார்ந்தே வாழ வேண்டும் என்ற நிலை உருவாகியது. தாய்வழி சமுதாயம் தந்தை வழிச் சமுதாயமாக மாற்றம் பெற்றது. அக்கால கட்டத்திலிருந்து விதவைகள் மறுமணம் செய்யக் கூடாது கணவன் இறந்தபின் தீக்குளித்து உயிர்விடுதல் எட்டு வயதுப் பெண் பிள்ளைக்கும் திருமணம் செய்வித்து அவள் உயர்ச்சியைத் தடுத்தல் ஆண்கள் பல பெண்களைத் திருமணம் செய்வதற்குத் தடையில்லை. போன்ற அடக்கு முறைகள் ஆரம்பமாயின.

இன்றைய நிலையில் மெல்ல மெல்ல இந்த முறைகள் திரும்பவும் மாற்றம் பெற்று வந்திருப்பதை நாம் உணரக்கூடியதாக இருக்கின்றது. பெண்கள் தம்முடைய பலவீனங்களைப் [மாதவிடாய் பிள்ளைப்பேறு] பலமாக மாற்றி வானவூர்தி இயக்கவும் கடலில் கப்பல் விடவும் விண்வெளிப் பயணம் மேற்கொள்ளவும் குத்துச் சண்டை புரியவும் ஆரம்பித்து விட்டார்கள். பெண்களுக்கு பல உரிமைகள் வழங்கப்பட்ட போதும் ஆணாதிக்க மரபணு துரிதமாகத் தொழிற்படும் ஆண்கள் இன்றும் பெண்களை அடிமைகளாக பாவனை பண்ணுகின்ற குணாதிசயங்கள் உடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். இது காலப் போக்கில் நீக்கப்பட்டு விடும் என்னும் நம்பிக்கை பெண்கள் மத்தியில் இருக்கின்றது.

மேலும் பெண்மையைக் குறி வைத்து அவளின் சுயநினைவற்ற நிலையில் மானபங்கம் செய்கின்ற மனநிலை பாதிக்கப்பட்ட ஆண்கள் இன்றும் உலகம் முழுவதும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். இதற்கு தீர்வு காண்பது கடினம். காமம் என்பது புனிதமானது என்ற புரிந்துணர்வும் சந்ததி வளர்ச்சிக்கு உரியது என்னும் அறிவும் சிறுவயதில் இருந்து போதிக்கப்பட்டால் அன்றி தீர்வு காணமுடியாது. மனிதன் தானாகவே தன்னை அடக்கும் மனவளக் கலையைக் கற்றுத் தேற வேண்டியது அவசியம். காலமே அனைத்துக்கும் தீர்வு சொல்லும். சிணுங்குவதை விட்டுவிட்டு மனச்சிரத்தையுடன் பெண்கள் தொழிற்பட வேண்டியது அவசியம்.

**உசாத்துணை நூல்: தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்**









# வாழ நினைத்தால் வாழலாம்

தாயகத்தில் பருத்தித்துறை நகரில் திருமதி. சண்முகலிங்கம் செல்வராணி என்கின்ற சுறுசுறுப்பான ஒரு அன்னை பல வருடங்களாக மரக்கறிகள் சந்தையில் விற்று வாழ்ந்து வருகிறார்.

தனது 22 வயது முதல் [51 வருடங்கள்] காலை 4.30க்கு எழுந்து கொடிகாமம் சந்தைக்குச் சென்று வேண்டிய மரக்கறிகள் வாங்கி சரியாக காலை 7.30 க்கு சந்தைக்கு வந்து சேர்வார். இவரது கணவன் நோய்காரணமாக இறந்த பின்பும் தனது குடும்பத்தை சிறப்பாக தனது கடின உழைப்பால் நிர்வாகித்தார்.

இவர் தனது வருமானத்தில் பிள்ளைகளை வளர்த்து அவர்களுக்கு உரிய காலத்தில் திருமணம் செய்து வைத்து தற்போதும் தன்னால் முடியும்வரை உழைத்தே உண்ணுவேன் என்ற மனதிடத்துடன் வாழ்ந்து வருகிறார். 13 வயதில் தான் திருமணம் செய்தாகவும் 15 வயதில் குழந்தைகள் பெற்றதாகவும் தன் கடந்தகால வாழ்க்கையை திறந்த புத்தகமாக பகிர்கிறார்.

இவர் ஏனைய முதியவர்களுக்கு மட்டுமல்லொ இளையவர்களுக்கும் ஒரு பாடமாக தனது விடா முயற்சியால் வியாபாரத்தில் உயர்ந்து இருக்கிறார். உயர்ந்து என்றால் இலட்சங்கள் என எண்ணவேண்டாம். தன் இலட்சியத்தால் என்று கொள்ளவும். இதுவரை எந்த நோயும் அவரை அணுகாதபடி தன்னுடம்பை தனது வாழ்க்கை முறை காத்துவருவதாகக் கூறுகிறார். 73 வயதான இந்த அன்னையை பங்குனி மாதம் மகளிர்தினம் கொண்டாடும் இவ்வேளையில் புதுமைப்பெண்ணாக வெற்றிமணி கௌரவித்து மகிழ்கிறது.

திருமதி யோ.சாந்தி

# ஊரிலுள்ள மாமரங்கள் இப்போது பெரிதாகக் காய்ப்பதில்லை ஏன்?



ஆசி. கந்தராஜா
(அவுஸ்ரேலியா)

ஊரிலுள்ள மாமரங்கள் இப்போது பெரிதாக காய்ப்பதில்லை. இது மரத்தின் குற்றமல்ல. மாமரங்களைப் பராமரிக்காத மனிதர்களின் குற்றமே இது.

இலங்கையில் மாமரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக பின்வளவிலேயே நிக்கும். இவற்றை யாரும் 'கவ்வாத்து'ப் (Prune) பண்ணுவதில்லை. ஊரில் மாமரங்கள் தன்னிச்சையாக வளர்ந்து பெரிய இடத்தை பிடித்துக் கொள்ளும். இலங்கையில் மாம்பழத்துக்கு பெயர்போன யாழ்ப்பாணத்திலே வணிகரீதியாகொ தோட்டத்தில் அல்லது தோப்பில் மாமரங்கள் வளர்க்கப்படுவது மிகமிகக் குறைவு. இந்தப்போக்கை நாம் மாற்ற வேண்டும்.

மாமரத்தில் இளம் கிளைகளின் நுனிக்குருத்தே பூக்களாக மாறும்.

பெரிய மரங்களின் கிளைக் கூடலின் உட்பகுதியில் இளம் குருத்துக்கள் இல்லாததால் மரத்தின் கிளைக்கூடலின் (Vegetative Crown) வெளிப்பகுதியில் மாத்திரம் பூக்கள் தோன்றி மாங்காய் காய்க்கும். உட்பகுதிக் கொப்புக்களிலுள்ள கிளைகளில் மிக அரிதாகவே பிஞ்சுகள தோன்றும்.

மாமரத்தை காட்டு மரங்கள் போல தன்னிச்சையாக வளரவிடின் ஒரு பரப்புக் காணியில் ஒரு மாமரம் வளரவே இடம் காணும்.



ஆனால் மாமரத்தை கவ்வாத்துப் பண்ணி வளர்ப்பதன் மூலம் சின்ன கிளைக்கூடல் கொண்ட பல மாமரங்கள் நடமுடியும். இதனால் ஒரு பெரிய மரத்தின் கிளைக் கூடலின் வெளிப்புறத்தில் காய்க்கும் மாங்காய்களை விடொ சிறிய கிளைக்கூடல்கள் கொண்ட பல மாமரங்களில் அதிக மாங்காய்களை பெற முடியும்.

மாமரத்தை குட்டையாக வளர்க்கொ கவ்வாத்துப் பண்ணுவது ஒரு முறை. இன்னுமொரு முறை Cultar என்ற மருந்தை தெளிப்பது அல்லது கரைத்து மரத்தின் அடிக்கு ஊற்றுவது. இந்த மருந்தை PB2 அல்லது Paclobutrazol என்று கூறுவதுமுண்டு. PB2 மனித சௌக்கியத்து தீங்கு விளைவிப்பதாக அறியப்படவில்லை.

நன்றி: ஆசி.கந்தராஜாவின் டயறிக் குறிப்பு (Facebook)



Deutsche Bank

# Willkommen in Ihrer Filiale Duisburg.



Janagran Mahendran
Berater Private Banking

Als Kunde erwarten Sie heute nicht nur erstklassige Finanzlösungen, sondern eine faire und verständliche Beratung. Wir wollen Ihren Ansprüchen gerecht werden – und haben uns zum Ziel gesetzt, Sie als verlässlicher und leistungsstarker Partner auf Ihrem privaten und geschäftlichen Weg zu begleiten. Dafür verbinden wir die Reichweite, Erfahrung und Leistungsstärke eines global führenden Finanzdienstleisters mit der Zuverlässigkeit und Kundennähe einer Hausbank. Sprechen Sie jetzt mit uns.

Filiale Duisburg
Königstraße 7–11, 47051 Duisburg
Telefon (0203) 9922-521
janagran.mahendran@db.com

| | |
|---|---|
| Nettodarlehensbetrag | 1.000 EUR |
| Effektiver Jahreszins* | 1,75 % |
| Fester Sollzinssatz p. a. | 1,74 % |
| Monatliche Rate | 84,12 EUR |
| Laufzeit in Monaten/Anzahl Raten | 12 |
| Zu zahlender Gesamtbetrag | 1.009,43 EUR |

Das Angebot entspricht dem repräsentativen Beispiel gemäß § 6a Absatz 4 PAngV.




* Gilt für einen Kreditbetrag von 1.000 bis 50.000 Euro bei 12 Monatsraten (gilt nur für Kunden ohne bestehenden Deutsche Bank PrivatKredit). Diese Kondition erhalten mindestens 2/3 der Kunden bei Abschluss eines Deutsche Bank PrivatKredits. Laufzeit in Abhängigkeit vom Ratenzahlungsbeginn: 12 bis 16 Monate. Das Angebot ist gültig bis 31. März 2021. Bonität vorausgesetzt.

Darlehensgeber: Deutsche Bank AG, Theodor-Heuss-Allee 72, 60486 Frankfurt am Main

# கலக்கும் காத்து வாக்குல ரேண்டு காதல்

விக்னேஷ் சிவன் இயக்கத்தில் விஜய் சேதுபதி நயன்தாரா சமந்தா என தமிழ் சினிமாவின் முன்னணி நட்சத்திர கூட்டணி இணைந்து நடித்திருக்கும் படம் காத்து வாக்குல ரெண்டு காதல்.



'நானும் ரௌடி தான்' படத்திற்கு பிறகு இயக்குநர் விக்னேஷ் சிவன் மீண்டும் காதல் நகைச்சுவையாக இப்படத்தை இயக்கியுள்ளார். அனிருத் இசையில் வெளியான மூன்று பாடல்களும் ரசிகர்களை கவர்ந்து பெரு வரவேற்பு பெற்றுள்ளன.

இந்நிலையில் இப்படத்தின் டீசர் வெளியாகி ரசிகர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும் யூடியூப் டிரெண்டிங்கில் முதலிடம் பிடித்துள்ளது.

இப்படம் வரும் 2022 ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.



# ரஜினியுடன் இணையும் ஐஸ்வர்யா ராய்?

அண்ணாத்த படத்தை தொடர்ந்து ரஜினிகாந்த் எந்த இயக்குநருடன் கைகோர்க்க போகிறார் என்று அனைவரும் எதிர்பார்த்து காத்துகொண்டி ருந்தார்கள்.

அப்படி அனைவருக்கும் ஆச்சரியமளிக்கும் விதமாக நெல்சன் திலிப்குமார் தான் ரஜினி 169 படத்தை இயக்கவுள்ளார் என்று சன் பிச்சர்ஸ் நிறுவனம் அறிவிப்பை வெளியிட்டது.

பீஸ்ட் படத்தை தொடர்ந்து நெல்சன் மீண்டும் சன் பிச்சர்ஸ் தயாரிப்பில் இணைந்து இயக்கவுள்ள படம் ரஜினி 169.இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இந்நிலையில் இப்படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடிக்க போவது யார் என்ற கேள்வி தற்போது ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

அதற்கு பதிலளிக்கும் விதமாகொ ரஜினி 169 படத்தில் ரஜினிகாந்திற்கு ஜோடியாக பொ லிவுட் நடிகை ஐஸ்வர்யா ராயை நடிக்க வைக்க பேச்சு வார்த்தை நடந்து வருவதாக சமூக வலைத்தளத்தில் பேசப்பட்டு வருகிறது. ரஜினிகாந்த் மற்றும் ஐஸ்வர்யா ராய் இருவரும் இணைந்து இதற்கு முன் எந்திரன் படத்தில் நடித்திருந்தது குறிப்பிடத்தக்கது. இப்படம் வரலாறு காணாத வெற்றி பெற்றது.

# சிவகார்த்திகேயன் ஜோடியான பிரிட்டிஷ் நடிகை

சிவகார்த்திகேயன் தெலுங்கு சினிமாவின் முன்னணி இயக்குனர் அனுதீப் இயக்கும் புதிய படத்தில் நடிக்கவுள்ளதாக அறிவிப்பு வெளியானது.

ஸ்ரீ வெங்கடேஸ்வரா சினிமாஸ் நிறுவனத்துடன் இணைந்து சுரேஷ் புரொடக்ஷன் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு தற்காலிகமாக 'எஸ்.கே. 20' என பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக பிரிட்டிஷ் நடிகையான ஒலிவியா மோரிஸ் நடிக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒலிவியா மோரிஸ் தற்போது இயக்குனர் ராஜமௌலி இயக்கியிருக்கும் ஆர்ஆர்ஆர் படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்.



# பண்டாரவன்னியன் புத்தகசாலையால் ஏற்பாடு செய்யப்பட்டப் புத்தகக் கண்காட்சி



பண்டாரவன்னியன் புத்தகசாலையால் ஏற்பாடு செய்யப்பட்டப் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் வவுனியா பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது. குறித்த நிகழ்வு மாசி மாதம் 11 –12 மற்றும் 13ம் திகதி ஆகிய மூன்று நாட்கள் இடம் பெற்றது. ஈழத்து எழுத்தாளர்களது புத்தகங்களை கூடிய அளவில் முழுமையாக காட்சிப் படுத்தப்பட்டிருந்த இப்புத்தகக் கொண்டாட்டமானது பெரும் சவால்களுக்கு மத்தியில் எம்மால் வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டது.

அதிகளவான வாசகர்கள் மற்றும் எழுத்தாளர்கள் என பலர் வருகை தந்து எமக்கு ஆதரவை வழங்கியிருந்தார்கள்.

நீங்கள் எம்மோடு புத்தகங்கள் மூலம் இணைய விரும்புகிறோம்.எம்மிடமிருந்து புத்தகங்களைப் பெற தொடர்பு கொள்ளலாம்.

**Pandaravanniyan book shop-**
**No – 113- School Road-**
**Pandarikulam-Vavuniya.**
**+940772244616- Pandaravanniyanbookshop@gmail.com**


தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள
**"பண்டாரவன்னியன் புத்தகசாலையில்"**
ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.

**தொடர்புகளுக்கு:-**
**பண்டாரவன்னியன் புத்தகசாலை**
**இல., 113 பாடசாலை வீதி,**
**பண்டாரிகுளம், வவுனியா, இலங்கை**
**+94772244616**

இது வெற்றிமணியின் ஒரு இலவச விளம்பரம். நம் இளஞர்கள் முயற்சிக்கு கைகொடுப்போம்!


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
சித்திரைப் புத்தாண்டு மலிவு விற்பனை! ஆரம்பம்
திருமண பட்டுப்புடவைகள் புத்தம் புதிய டிசைன்களில் மங்கையர் மனங்கவரும் சேலைகள் சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள், குர்த்தாக்கள், இன்னும் இமிற்றேசன் நகைகள் அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று மகிழ நாடுங்கள்.
சித்திரை புத்தாண்டு கொண்டாட்டம்
என்றும் சிறப்பு விலை
தொடர்பு இலக்கம்: 01731937325
Tel: 02102 844744
HP: 0173 1937 325
'Jasmine Silk House''
Fester Str.50- 40882 Ratingen


Asia Bazar
துரித பணமாற்றுச்சேவை
ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள் வியாழன், சனிக்கிழமை தோறும் இலங்கை, இந்திய உடன் மரக்கறிவகைகள் கடல் உணவுப் பொருட்கள் இன்னும் பல...
Ria Money Transfer
VALUTRANS
MoneyGram
உரிமையாளர்: பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303 | Fax: 02161-309282


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Ludwig str.87a
70197
Stuttgart
சிறப்பு விலையில் அழகிய சேலைகள்
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும் நவீன டிசைன்களில் அமைந்த சேலைகள் மற்றும் இமிற்றேசன் நகைகள் அனைத்திற்கும் நீண்ட கால நம்பிக்கை மிக்க ஸ்தாபனம் பிருந்தாஸ்
SALE
Stuttgart நகரில்...
Tel: 0711 615 8976/ 0170 334 4059


TTBOX
HAPPY Women's DAY
Arabic Song
FURTHER MORE DETAILS CONTACT WITH US
0049 163 000 7800
0044 7523 2323 43
0045 2657 3651
0033 6057 5239 9
0031 6180 20014


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
புதிய இடத்தில்!!! புதிய பொலிவுடன்!!
069-97 693 374
info@saravanaabhavan.de
kaiserstraße 68, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K France Germany Australia South Africa Canada U.S.A


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698